Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 09 புதன்கிழமை (22.04.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 204

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

## விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு

### நாடுதிரும்பிய பஷில் தெரிவிப்பு

தனக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள அனைத்து விசாரணைகளுக்கும் முழுமையான ஆதரவு வழங்குவேன் என முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திறங்கிய சந்தர்ப்பத்தில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நான் நாட்டை விட்டுத் தப்பியோடவில்லை எனவும் அவர் கூறியுள்ளார். நாடாளுமன்றத்திற்கு மூன்று மாத கால விடுமுறையிலே தான் நாட்டை விட்டு சென்றுள்ளதாகவும் பயந்து செல்லவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி நடந்த தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்ததையடுத்து, அமெரிக்காவுக்குச் சென்ற அவர், நேற்று பிற்பகல் 1.45 மணியள

19 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படைத் தளபதியுடன் சீனத்தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான சீனத் தூதுவர் ஜி ஷியாங்லிங் மற்றும் கடற்படைக் கட்டளைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா ஆகியோருக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பு நாவல கடற்படைத் தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.

சீனாவின் இலங்கைக்கான தூதுவராக விளங்கும் இவர் இராணுவக் கடற்படை மற்றும் வான்படை நடவடிக்கைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்படும் ஒருவராவார்.

குறித்த சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நட்புறவு, இருதரப்பு உறவு முக்கியத்துவம் மற்றும் பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

# மைத்திரி மீது நம்பிக்கையில்லா பிரேரணை

## காத்திருக்கிறது நெருக்கடி



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் கணிசமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரைமறைவில் முயற்சி செய்து வருவதாக தெற்கில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிகவும் இரகசியமான முறையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த முயற்சிக்காக கையொப்பங்களைத் திரட்டி வருகின்றனர். நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்த யோசனையை சபாநாயகர் ஏற்றுக் கொண்டால் அதன் பின்னர், ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

75பேருக்கு மேல் கையொப்பமிட்டு யோசனை முன்வைக்கப்பட்டால் அதனை சபாநாயகரினால் நிராகரிக்கவும் முடியாது என்றும் கையொப்பங்களைத் திரட்டி வருகின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்

19 ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரியுடன் மகிந்த விரைவில் நேரடி சந்திப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கும் இடையில் சந்திப்பு ஒன்று ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய சில விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட உள்ளது.

இருவரும் சந்திப்பதற்கு பொதுவான ஓர் இடமொன்று ஒழுங்கு செய்யப்படும். இருவரும் சந்திப்பு நடத்துவதற்கு உசிதமான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்றில் நேற்றும் அமளிதுமளி

### தள்ளிப்போனது 19 ஆம் திருத்தம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள், நேற்றும் நாடாளுமன்றில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நடாளுமன்றத்தில் நேற்றும் இன்றும் விவாதிக்கப்படவிருந்த 19ஆம் திருத்தச் சட்டம் மீதான நடாளுமன்ற விவாதம் இடம் பெறவில்லை என்பதுடன் எதிர்வரும் 27ஆம் திகதி வரை நாடாளுமன்றமும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

மாகாணசபை மற்றும், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களால் அழைத்து வரப்பட்ட மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் நேற்று காலை 9 மணியளவில் நாடாளுமன்ற வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், எந்த நேரத்திலும், நாடாளுமன்ற சுற்றுப்பகுதியில், போராட்டக்காரர்கள் மீது பொலிசாரின் நடவடிக்கை இடம்பெறலாம் என்ற பரபரப்பு நிலை

19 ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த வேண்டும்

### அரசிடம் கோருகிறார் டக்ளஸ்



வலிகாமம் வடக்கு பகுதியில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து மீள் குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்ட காணிகளை துப்புரவு செய்து கொடுப்பதற்கும், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் புனரமைப்பு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் ஊடாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

பல வருடங்களாக பாவனையின்றிக் கிடந்த பகுதிகளே இப்போது மீள் குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்டுள்ளன. எனவே, இவற்றை முற்று முழுதாக துப்புரவு செய்யக்கூடிய வசதிகள்

19 ஆம் பக்கம் பார்க்க




வலி.வடக்கு வீமன் காமத்தில் நேற்று மீள் குடியமர்ந்த குடும்பமொன்று மதிய உணவுக்காக சந்திக்கும் போராட்டம் இது...






கல்வியமைச்சினால் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழில்நுட்ப ஆய்வு கூடத்திறப்பு விழாவின் போது வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், மாணவியொருவர் ஆகியோர் ஆய்வுகூடத்தை திறந்துவைப்பதையும் விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் அங்கு இடம்பெற்ற கலைநிகழ்வின் ஒருகாட்சியையும் காணலாம். (01)

# தரா சுகளுக்கு முத் திரை இடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள வியாபார நிலையங்களில் பயன்படுத்தும் நிறுவை அலகுகளுக்கான (தராசு) முத்திரை பதிக்கும் நடமாடும் சேவை, திருநெல்வேலியிலுள்ள நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்தில் இடம்பெறுவதாக யாழ். மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமனங்கள் சேவை பிரிவின் பொறுப்பதிகாரி பி.ராஜேஸ்வரன், தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இந்த நடமாடும் சேவை நாளை வரையில் நடைபெறவுள்ளது.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவை திணைக்களத்தின் முத் திரைகளைப் பதித்துக் கொ ள்ளாத நிறுவை அலகுகளை (தரா ாசு) பயன்படுத்தும் வியாபார நிலையத்தினர், நடமாடும் சே வைக்கு சென்று வியாபார நில லயங்களின் பெயர்களை உ றுதிப்படுத்தி தராசுகளுக்கான மு த்திரைகளை பதித்துக் கொள் ள லாம்.

அளவீட்டு அலகுகள் நியமங் கள் பிரிவு திணைக்களத்தின் மு த்திரைகளைப் பதித்துக் கொள் ள ாத நிறுவை அலகுகளை பயன ப டுத்தி வியாபாரம் செய்பவர்க ளுக்கு எதிராக கடுமையான சட்ட ந டவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
| --- | --- |
| Am 05.00 | ஆலய த ரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ் சம் கலாட் டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோ ாகனம் |
| Am 10.30 | சிரிக் க சிரிக்க |
| Am 11.30 | அதி ர்வுகள் |
| PM 12.30 | Hel lo DD |
| PM 01.00 | மதி ிய செய்திகள் |
| PM 01.30 | தி ரைப்படம் |
| PM 03.55 | ம ாலை செய்திகள் |
| PM 04.00 | ம ழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர் புகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# வளலாய் அமெரிக்க மிசன் பாடசாலை 20 வருடங்களின் பின் நேற்று ஆரம்பம்



வளலாய் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, 20 வருடங்களின் பின்னர் நேற்றுத் தொடக்கம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சர தம்பிராசா குருகுலராஜா இந்த பாடசாலையின் நடவடிக்கைகளை சம்பிராதயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலையின் பழைய கட்டடம் முற்றாக அழிவடைந்தமையால் வளலாய்ப்பகுதியில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைக்கு அதிபராக எஸ்.ரவீந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். தரம் 1 முதல் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட இந்தப் பாடசாலையில் தற்போது 21 மாணவர்கள் இணைந்துள்ளனர்.

மாணவர்களின் இணைவை கண்காணித்து தற்காலிக கொட்டகைகள் மற்றும் ஆசிரியர் நியமனங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அமெரிக்க மிஷனறிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் தரம் 1 முதல் க.பொ.த சாதாரண தரம் வரையில் வகுப்புக்கள் உள்ள பாடசாலையாக முன்னர் இருந்தது. இடப்பெயர்வின் பின்னர், இந்தப் பாடசாலை முற்று முழுதாக சேதமடைந்தது.

வளலாய் மேற்குப் பகுதியில் 2011 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்தபோதும், பாடசாலை இயங்காமையால் வளலாய் மாணவர்கள் அச்சுவேலி மத்திய கல்லூரி மற்றும் இடைக்காடு மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் வடமாகாண கல்வி அமைச்சு மற்றும் வளலாய் மீள்குடியேற்ற குழு ஆகியவை இணைந்து மேற்கொண்ட முயற்சியின் காரணமாக பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா விசாவில் இலங்கை வரும் இந்திய வியாபாரிகள் நகைத்தொழிலில்

## சட்டநடவடிக்கை எடுக்கக்கோரிக்கை

சுற்றுலா விசாவில் வந்து நகைத்தொழிலில் ஈடுபடும் இந்திய வியாபரிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென நகைத் தொழிலாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நகைத்தொழில மற்றும் நகைக்கடைகளை நடத்துபவர்கள் நகைத் தொழிலில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றும் இடையூறுகள் காரணமாக சிறந்த வருமானத்தைப் பெறமுடியாத நிலைக்குள்ளாகியுள்ளனர். முன்னரைப் போல் மக்கள் நகைகளைக் கொள்வனவு செய்வதிலும ஆர்வம் காட்டுவதில்லை.

இந்நிலையில் சமீபகாலமாக சுற்றுலா விசாவில் இலங்கை வரும் இந்திய வியாபாரிகள் வீடுவீடாகச் சென்று தங்க நகைகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் மாதாந்த தவணை மற்றும் கடன் அடிப்படையில் நகை விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

இதன்காரணமாக மிகுந்த சிரமங்களின் மத்தியில் இலட்சக் கணக்கில் உள்ளூரில் முதலீடு செய்து நகைத்தொழிலில் ஈடுபடும் வர்த்தகர்கள் பெரும் நஷ்டங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளரின் கவனத்திற்கு இலங்கை நகைத்தொழிலாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (10)

# எந்திரவியல் விஞ்ஞா ன டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பம்

கட்டுநாயக்காவில் உள்ள எந்திரதொழில்நுட்பவியல் நிறுவகத்தில் தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4 வருட பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் கோரப்பட்டுள்ளது.

ஜீ.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையில் கணித பாடங்களில் சித்தியடைந்த 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் 29.05.2015 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்களை 24.04.2015 ஆம் திகதி வர்த்தமானியில பார்வையிடலாம் அத்துடன www.iet.edu.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விபரத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை இல.44, சோமசுந்தரம் வீதி சுண்டிக் குளியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆலய மகோற்சவங்கள்

மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ள இம்மகோற்சவத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி மாலை மஞ்சத் திருவிழாவும், மே மாதம் 2 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 3 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், தீர்த்தோற்சவமும் கொடியிறக்கமுமம் இடம்பெறும்.

மேமாதம் 4 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் 5 ஆம் திகதி வைரவர் மடையும் இடம்பெற்று திருவிழா நிறைவு பெறும். (10)

---

மாதகல் நுணசையம்பதி முருகமூர்த்தி கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மஹோற்சவ பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (10)

# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராக 8 முறைப்பாடுகள்

பொலிஸாருக்கு எதிராக 8 முறைப்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் திற்கு எதிராக 2 முறைப்பாடுகளும், சுன்னாகம் 1 அச்சுவேலி 1, வட்டுக் கோட்டை 1, பளை 1 தெல்லிப்பளை 1, மன்னார் 1 உட்பட 8 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த முறைப்பாட்டில், தெல்லிப் பளை பொலிஸார் பாதிக்கப்பட்ட நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை தொடர்பிலும், நட வடிக்கை எடுக்க தவறியமையாலும், பொலிஸாரினால் அவசியமற்ற முறை யிலான பயமுறுத்தல் உள்ளிட்ட பல முறைப்பாடுகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் கடந்த ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு ளமையும் குறிப்பிடத் தக்கது. (25)

# யாழ். மாவட்ட செயலகத்தில் புள்ளிவிபர கிளை திறப்பு



யாழ். மாவட்ட செயலகத்தில் புள்ளி விபர கிளை நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலாளர் நா.வேத நாயகன் மற்றும் புள்ளிவிபர திணைக்கள பணிப்பாளர் ஏ.ஜே. சதரசிங்கே ஆகி யோர் திறந்து வைத்தனர்.

அதன்பின்னர், புள்ளி விபர திணைக் கள அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட மேல திக அரசாங்க அதிபர் ரூபினி வரத லிங்கம் மற்றும் புள்ளிவிபர திணைக்கள அதிகாரிகள் உட்பட யாழ். மாவட்ட செயலக அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (25)

# மன்னாரில் விசேட சந்திப்பு



மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வர னுக்குமான விசேட சந்திப்பொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் மன்னார் தனியார் பேருந்து நிலையத்தில் இடம்பெற்றது.

இவ் விசேட ஒன்றுகூடலினை தனி யார் பேருந்து சங்க நிர்வாக சபையினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் புதிய நேர சூசிகள் மங்கும் பேருந்து வழிகள் போன்றவையும் மற் றும் சங்கத்தினர் எதிர்நோக்கும் பிரச்சி னைகள் தொடர்பிலும் கலந்துரையாடப் பட்டது. (60)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வலி.வடக்கு முகாம்களில் வசிக் கும் வறிய மாணவர்களுக்கான கற் றல் உபகரணங்கள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டது.

பிரித்தானியாவின் மயிலிட்டி மக் கள் ஒன்றியம் வலி.வடக்கு கண்ணகி முகாமைச் சேர்ந்த 16 மாணவர் களுக்கே கற்றல் உபகரணங்களை வழங்கியது. மேற்படி கற்றல் உபகரணங்களை மயிலிட்டி மக்கள் ஒன்றியத்தின் பொறுப்பாளர் ந.இளங் குமாரன் வழங்கி வைத்தமை குறிப் பிடத்தக்கது. (18)



# கோழிப்பண்ணையும் உணவகமும் அருகருகே அமைந்திருக்க முடியும்

## சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோழிப்பண்ணையும், உண- வகமும் ஒரே காணியில் அரு- கருகே அமைந்திருக்க முடியும் என சங்கானை சுகாதார வைத் திய அதிகாரி வைத்திய கலா நிதி சு.மோகனகுமார் தெரிவித் துள்ளார்.


வலிமேற்கு பிரதேச எல்லைக் குட்பட்ட பகுதியில் 4 பரப்பு காணியில் உணவகம் மற்றும் கோழி உரித்து விற்பனை செய் யும் பண்ணை என்பன அமைந் துள்ளன. இது பொதுவான சுகா தார விதிமுறைகளுக்கு உட் பட்டதாகும்.

அதனால் நோய்த் தொற்றுக் காவிகளின் தாக்கம் ஏற்படாதா என சந்தேகம் தெரிவித்து அப் பிரதேச பொது அமைப்பு ஒன் றினால் சுகாதார வைத்திய அதி காரி மற்றும் பிரந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மாவட்ட செயலகம் என்பவற்றிற்கு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு கடிதம்மூலம் அனுப்பி வைக்கப் பட்டது.

அதற்கு குறித்த பொது அமைப்பிற்கு எழுதிய பதில் கடிதத்திலேயே இவ்வாறு தெரி வித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர் பாக பிரதேச பொது சுகாதார பரி சோதகர் நேரில் சென்று உணவு கையாளும் நிலையம் மற்றும் கோழி உரித்து விற்பனை செய் யும் பண்ணை என்பன பரிசீலனை செய்யப்பட்டது. உணவு கையா ளும் நிலையம் தனியாக சுற்றி வேலி அமைக்கப்பட்டு அதனுள் இயங்குகின்றது. கோழிப் பண்ணை பிற்பகுதியில் இயங்குகின்றது. இங்கு சுகாதார சீர்கேடு தென்பட வில்லை. இது தொடர்பாக பண்ணை உரிமையாளருக்கு பூரண விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது என கூறப் பட்டுள்ளது.

பொதுவாக உணவு உற்பத்தி மற்றும் உணவு கையாளும் நிலை யங்களுக்கு அண்மையில் பண் ணைகள், கொல்களம் அமைக்க அனுமதி வழங்கப்படுவதில்லை என பரவலாக நம்பப்பட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.(54)



அட்ஷய திருத்தியை தினமான நேற்று நெல்லியடிப் பகுதியில் பொது மக்கள் தங்க நகைகள் கொள்வனவு செய்வதைக் காணலாம். (18)

# விடுதியில் தனித்திருந்த பெண்ணிடம் சேஷ்டை புரிந்த நபர் கைது

யாழ்.நகரப் பகுதியில் அமைந்துள்ள பிரபல விருந்தினர் விடுதி ஒன்றில் தனிமையில் இருந்த பெண்ணிடம் சேஷ்டை புரிய முற் பட்ட யாழ்.கொட்டடி இளைஞர் கைது செய்யப்பட்டு எச்சரிக்கப் பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. மது போதையில் இருந்த நபர் விடுதி அறையில் தனித்திருந்த பெண்ணிடம் சேஷ்டை புரிய முற்பட்ட வேளை குறித்த பெண் கூச் சலிட்டு ஏனையவர்களை அழைத்துள்ளார். இதன் பின் விடுதி நிர் வாகத்தினர் அந்த நபரை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த நபரை கைது செய்த பொலிஸார் எச்சரிக்கை செய்த பின் அவரை விடுதலை செய்துள்ளனர். (25)

# மூன்று நூல்களின் அறிமுக விழா

யாழ்.சங்கானையை பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப் பிடமாகவும் கொண்ட ஜீவகுமாரனின் மூன்று நூல்கள் அறிமுக விழா மட்டக்களப்பு நகர மண்டபத்தில் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் இது இடம்பெற்றது.

ஓய்வு பெற்ற பேராசிரியர் எஸ்.மௌனகுரு நிகழ்வுகளை நெறிப்படுத்தி நடாத்தினார்.மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டக் கலைஞர்களை ஒன்றிணைத்து இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜீவகுமாரனின் கதைகள் - எழுத்தாளர் திருமலை நவம், கடவுச் சீட்டு (நாவல்) - பேராசிரியர் செ.யோகராசா, ஜேர்மானிய கரப்பான் பூச்சிகள் அ.ச.பாய்வா ஆகியோர் நூல்களின் விமர்சன உரையை நிகழ்த்தினர்.

மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார், மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் கவிஞர் வி.மைக்கல் கொலின் உள்ளிட்டோரும் இன்னும் பல கலை இலக்கிய ஆர்வலர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## மாணவர்கள் எண்ணிக்கை குறைப்பு

தேசிய பாடசாலைகளில் ஒரு வகுப்பின் மாணவர் எண்ணிக் கையை 25 ஆக மட்டுப்படுத் துவதற்கு பரிசீலனை மேற்கொள் ளப்படுவதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் கூறி யுள்ளார். மேற்படி நடவடிக்கை இரு கட்டமாக நடைபெறவுள்ளதாகவும் முதற் கட்ட நடவடிக்கையாக 35 வரை மாணவர்களை மட்டுப்படுத் தத் திட்டமிடுவதாகவும் இரண்டாம் கட்டமாக 25 ஆக மட்டுப்படுத்தப் படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இத்திட்டம் அமுலாக்கப்படும் வரை எக்காரணம் கொண்டும் ஒரு வகுப்பில் 40 மாணவர்களுக்கு மேல் அதிகரிக்க இடமளிக்கப்பட மாட்டாது என அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

தெரியாததை தெரியாது என்று ஒப்புக்கொள்வதுதான் அறிவு.
-கன்.'.ப்யூஹியஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பாராட்டப்பட வேண்டிய முயற்சி!

இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வந்துகொண்டிருக்கும் இரண்டு பெரிய கட்சிகளையும் தவிர்ந்த ஏனைய சிறுபான்மை அங்கத்துவக் கட்சிகளும் பிரமுகர்களும் நேற்றுமுன்தினம் கொழும்பில் சிறு மாநாடொன்றை நடத்தியிருக்கிறார்கள்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் முன்னெடுப்பிலும் ஏற்பாட்டிலும் நடைபெற்ற இந்த மாநாட்டில், தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பாக சிறுபான்மைக் கட்சிகளும் சிறுபான்மை இனக் கட்சிகளும் எதை வலியுறுத்த வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்தார்கள்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி சுமந்திரன், பேராசிரியர் திஸ்ஸவிதாரண, விக்கிரமபாகு கருணாரட்ண, டியூ குணசேகர, ஜேவிபி.யின் விஜிதஹேரத், ஹெல உறுமய அத்துரலிய தேரர், மனோகணேசன், மலையக கட்சிகளைச் சேர்ந்த எம்பிக்களான முத்து சிவலிங்கம், திகாம்பரம், ஆர். யோகராஜன் மற்றும் பி.பி. தேவராஜ், அதாவுல்லா, பிரபா கணேசன், குமரகுருபரன், முருகேசு சந்திரகுமார், சுகு சிறிதரன், டொக்டர் விக்னேஸ்வரன் மற்றும்பல தலைவர்களும் சிறுபான்மைக் கட்சிகள், இனங்கள் சார்ந்த பிரமுகர்களும் அறிஞர்களும் கலந்துகொண்டிருந்தார்கள்.

அனைவரும் ஒத்தகுரலில் பேசியுள்ளார்கள். தேர்தல் மறுசீரமைப்பால் சிறுபான்மைக் கட்சிகள் பாதிக்கப்பட்டு விடாமல் அந்தச் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கு ஒன்றுபட்டு நின்று கருத்துரைக்க வேண்டும் என்பதையே எல்லோரும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

அது குறித்த தீர்மானங்களையும் முடிவுகளையும் எடுப்பதற்காக சிறுபான்மைக் கட்சிகளைச் சேர்ந்தவர்களிலிருந்து ஒரு கமிட்டியை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற சுமந்திரன் எம்பியின் யோசனையையும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டார்கள்.

இந்த நாட்டின் இன்றைய குழப்பமான அரசியல் சூழ்நிலையில் இது சிறுபான்மைக் கட்சிகளின் ஒரு மிக முன்னுதாரணமான நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை.

இரு பெரிய கட்சிகளுக்கும் அழுத்தம் கொடுக்கக் கூடிய வகையில் ஏனைய கட்சிகள் இணைந்து மூன்றாவது அணியாகச் செயற்படுவது இன்று மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகர்வு.

இந்தியாவில் இரு பிரதான கட்சிகளையும் தவிர்ந்த ஏனைய கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு ஜனதா தளம் தலைமையில் அங்கே ஆட்சியமைத்த வரலாறும் உண்டு.

ஆட்சியைப் பிடிக்க முடியாவிட்டாலும் சிறுகட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு பலமாக இருப்பது, இந்த நாட்டின் ஜனநாயகத் தன்மைக்கும் சிறுபான்மை இனங்களின் அரசியலுரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கும் கூட நல்லது.

தேர்தல் முறை மாற்றத்தில் தங்கள் நலன்களை வலியுறுத்துவதற்காக ஒன்றுதிரண்ட இந்த சிறுபான்மைக் கட்சிகள் நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும் ஒன்றுபட்டுநின்று வலியுறுத்தல்களைச் செய்ய முடியும்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் ஜேவிபி–யையும் ஹெல உறுமய–வையும் தவிர்த்த ஏனையவர்கள் இனப்பிரச்சினைத் தீர்விலும் ஒத்தபடி ஏதோ ஓர் முடிவுக்கு வரக்கூடியவர்களே.

சிறுபான்மைத் தரப்பிலிருந்து பேசுபவர்களும் தங்கள் தேர்தல் வெற்றியைக் குறிக்கோளாகக் கருதி இனவாதக் கோஷங்களைத் தூக்கிப் பிடிப்பதை சற்று தணித்துக் கொள்வார்களானால், இரண்டு பிரதான தேசியக் கட்சிகளில் உள்ள கணிசமானவர்களும் கூட நியாயமான ஒரு தீர்வுக்கு பங்களிக்க வரக்கூடியவர்களே.

இலங்கை அரசாங்கத் தலைவர்கள் மட்டுமல்லாமல் சிங்கள இனமே காட்டுமிராண்டிகள், கொலைவெறியர்கள் அவர்களிடம் நமக்கென்ன பேச்சு என்றெல்லாம் தமிழ் மக்களை உணர்ச்சி வசப்படுத்துவதற்காக கதைவிட்டுக்கொண்டு இங்கே தீர்வை நோக்கி ஒரு சிறு அடிவைப்பும் செய்யமுடியாது. - ஆசிரியர்

# எதேச்சாதிகார போக்கில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு

## நிமால் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு எதேச்சதிகார போக்கில் செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று அவர இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சுயாதீன நிறுவனமாக அது விரும்பிய போக்கில் செயற்படக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸி டயஸ் உள்நோக்கத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்த விடயத்திலிருந்து நழுவிச்செல்ல முயற்சிக்கக் கூடாது.

முன்னாள் ஜனாதிபதி ஒருவரை இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு அழைப்பது தொடர்பில் சில நியதிகள் காணப்படுகின்றன என நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# எம்.பி.க்களிடம் வாக்குமூலம் பெறுவதாயின் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும்

## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்படும் போது அது குறித்து முன்னரே தமக்கு அறிவிக்க வேண்டுமென சபாநாயகர் சமால் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்றைய தினம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு, நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விசாரணை நடத்த வேண்டுமாயின், அல்லது வாக்கு மூலம் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் அது குறித்து சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவினர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் விசாரணை நடத்தக் கூடாது எனக் கோரி ஒரு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையிலேயே சபாநாயகர் இவ்வாறு நாடாளுமன்றில் அறிவித்துள்ளார்.

# இந்தியாவில் கல்விசார் பயிற்சிகளைப் பெற்ற வடமாகாண மாணவர்களின் தரவு சேகரிப்பு

யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதரகமானது 2010 நவம்பரில் புதிதாக ஆரம்பிக்கபடப்டு செயற்பட்டு வருகின்றது. தூதரகமானது தற்பொழுது இந்தியாவில் தமது கல்வி சார் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்ட வடமாகாண மாணவர்களது தரவுகளைச் சேகரித்து வருகின்றது.

வடமாகாணத்திலிருந்து சென்று இந்தியாவில் எந்திரவியல், கட்டடவியல், தொழில்நுட்பம், மருத்துவம், பாரம்பரியக் கலைகள் உட்பட அனைத்து பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் கலாநிதிப் பட்டப்படிப்புகளை அல்லது குறுகிய காலப் பயிற்சி நெறிகளை (ITEC/TCS) தமது சுயநிதியிடல் மூலமாகவோ அல்லது இந்திய அரசின் புலமைப்பரிசில் மூலமாகவோ மேற்கொண்டவர்கள் தமது சுயவிபரங்களை, பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தூதரக இணையத்தளத்திலிருந்து (www. cgijaffna.org) பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை cgi. jaffna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது இந்தியத் துணைத்தூதரகம், இல. 14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ, 10 மே 2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கும்படி யாழ்.இந்தியத்துணைத் தூதரகம் அறிவித்துள்ளது.

# திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு எதிராக ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் சட்டத்திற்கு எதிராக இலஞ்சம் பெற்றுக்கொண்ட சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு எதிராக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைப்பதற்கு முன்னர், அது குறித்து முதலில் தமக்கு அறிவிக்கவேண்டும் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ச, நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்

# ஜூனுக்குள் தேர்தலை நடாத்தி உறுதியான அரசை உருவாக்க வேண்டும்

## மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான அறிக்கை செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளதனால் அதற்கு முன்னர் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் நாடாளுமன்றக்கட்டடத் தொகுதியில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் இடம் பெற்றது. இங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான அறிக்கை செப்ரெம்பர் மாதம் வரையில் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளது. எனவே இம்மாத இறுதியில் நாடாளுமன்றத்தை கலைத்து ஜூன் மாத இறுதிக்குள் தேர்தலை நடத்தி உறுதியான அரசாங்கத்தை நாம் உருவாக்கவேண்டும். இல்லையேல் செப்ரெம்பர் மாதம் அறிக்கை வெளியிடப்பட்டால் பெரும்பாதகமான சூழலை நாம் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படலாம். எனவே இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும் என்று கூறியுள்ளார்.

# இருபது ஆண்டுகளின் பின்பாக தென்னாபிரிக்கா

நடேசன்



**1994** ஆண்டுவரையும் நிறபேதமான (Apartheid) அரசமைப்பை கொண்டு பத்து வீத வெள்ளை இனத்தவரால் பெரும்பான்மை கறுப்பு இனமக்களை பிரித்து ஒடுக்கி அரசாண்ட தென் ஆபிரிக்கா என்ற தேசம் வானவில்லின் வண்ணங்களைக் கொண்ட பல இனமக்கள் வாழும் ஒரு நாடு என நெல்சன் மண்டேலாவினால் பிரகடனப்படுத்தப்பட்டு இந்த ஆண்டுடன் இருபது வருடங்களாகிவிட்டது.

உன்னதமானவர்களால் தலைமை தாங்கி நடாத்தப்பட்ட விடுதலைப் போராட்டங்கள் நடந்த நாடுகளான கியூபா - வியட்னாம் போன்ற இடங்களுக்கு சென்றபோது ஏற்படும் உணர்வுகளை எழுத்தில் விபரிப்பது கடினமானது.

அங்குள்ள வரலாற்று சின்னங்களையும் அங்கு நடந்த சம்பவங்களையும் நூல்வழி படித்தும் செவி வழியாக கேள்விப்பட்டுமிருந்த எனக்கு அங்குள்ள மக்களிடமும் அவர்களைத் தலைமைதாங்கி நடாத்திய தலைவர்கள் மீதும் ஏற்பட்ட வியப்பு, மதிப்பு என்பன ஒருபுறம் இருக்க - வெம்பி விழலாகிய போராட்டத்தில் அகப்பட்ட இலங்கைத்தமிழனாக இருந்த எனக்கு மிகுந்த பணிவுகொள்ள இந்த நாடுகள் வழிவகுத்தன.

தென் ஆபிரிக்காவைப் பொறுத்த வரையில் மேற்குறித்த நாடுகளுக்கும் மேலாக வெற்றி அடைந்த போராட்டத்தின் பின்பு மனித மனத்தின் பழிவாங்கல் என்ற அடிப்படை உணர்வை வென்றதை மட்டுமல்ல பல நூற்றாண்டு காலம் எதிர்த்துப் போராடிய எதிரிகளானவர்களுடன் இணைந்து சகோதரர்களாக ஒரே நாட்டிற்குள் வாழும் உன்னதத்தை புரிந்துகொள்ள உதவியது. பேசும்போது கூட வார்த்தைகளில் வெறுப்பு தொனிக்காமல் பேசும் கறுப்பின மக்களின் பெருந்தன்மை மனதை உருகவைத்தது.

உலகப்படத்தில் ஆபிரிக்காவின் தென்முனையில் உள்ள தென்னாபிரிக்கா என்றவுடன் நெல்சன் மண்டேலாவும் ஆபிரிக்க மிருகங்களும் சாதாரணமாக எவருக்கு மனதில் வரும் விடயங்கள்தான்

இவற்றிற்கும் அப்பால் இந்திய இலங்கை நாட்டவர்களுக்கு காந்தியை மகாத்மாவாக்கிய நாடுதான் அந்த நாடு என்பதும் மறுக்கமுடியாதது.

லண்டனில் வக்கீலாக படித்துவிட்டு நம்மெல்லோரையும் போல், வேலைக்காகச் சென்ற சாதாரண மனிதனை அங்குள்ள நிலைமை உன்னத போராளியாக்கியது. அகிம்சை என்ற புதிய ஆயுதத்தை கையில் எடுத்து அங்கு போராட வைத்தது மட்டுமல்ல அதை தனது இந்திய நாட்டில் பிற்காலத்தில், புதிய போராயுதமாக மேற்கொண்டது மட்டுமல்ல உலகத்தில் அகிம்சை என்பதை புதிய கோட்பாடாக மனித குலத்திற்கு கொடையாக்கிய அவரது சரித்திரமும் மறுக்க முடியாது.

இதற்கும் மேலாக எனக்கு நினைவு வருவது மனித சமூகத்தின் தோற்றம் தொடங்கியது தென்னாபிரிக்க மண்ணில் தான் என்ற வரலாற்றுத் தகவல். தற்போதுள்ள மனிதர்களின் மூதாதையர்களான மனிதவர்க்கத்தின் உருவ அமைப்புள்ளவர்கள் ((Humanoid) இரண்டு மில்லியன் வருடங்கள் முன்பாக வாழ்ந்தவர்கள் (Southern Ape or Australopithecus Africans) என்ற உ ாரம் சிலகாலத்தின் முன்பு தென் ஆபிரிக்க தலைநகரான யோகன்ஸ்பேர்கின் அருகாமையில்

**தென் ஆபிரிக்காவைப் பொறுத்தவரையில், வெற்றி அடைந்த போராட்டத்தின் பின்பு மனித மனத்தின் பழிவாங்கல் என்ற அடிப்படை உணர்வை வென்றதை மட்டுமல்ல பல நூற்றாண்டு காலம் எதிர்த்து போராடிய எதிரிகளானவர்களுடன் இணைந்து சகோதரர்களாக ஒரே நாட்டிற்குள் வாழும் உன்னதத்தை புரிந்துகொள்ள உதவியது. பேசும்போது கூட வார்த்தைகளில் வெறுப்பு தொனிக்காமல் பேசும் கறுப்பின மக்களின் பெருந்தன்மை மனதை உருக்வைத்தது.**

உள்ள சுண்ணாம்புக் குகையில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த இடத்தை மனித பரிமாணத்தின் தொட்டில் (Cradle of Human civilisation) என்பார்கள்.

மண்டேலாவின் உடல் மரணித்தாலும் தனது காலடியை தென்னாபிரிக்கா எங்கும் நினைவுகளாக மிகவும் அழுத்தமாக பதித்து விட்டுச் சென்றுள்ளார். அவரது பெயரில் தெருக்கள், சிலைகள் மற்றும் மக்கள் ஒன்று கூடும் இடங்கள் என அவரது பெயர் நிறைந்துள்ளது மட்டுமல்ல - அவர் வாழ்ந்த வீடுகள் - பதினேழு வருடம் சிறையிருந்த ரொபின் தீவு என்பன உல்லாசப்பயணிகள் செல்லும் இடமாக அரசிற்கும் அங்குவாழும் மக்களுக்கும் அமுதசுரபியாகியுள்ளன.

ஹிலாரி கிளின்டன் மற்றும் ரோனி பிளேயர் ஆகியோர் அந்த ரொபின் தீவில் மண்டேலாவின் சிறைவாசத்தை புரிந்து கொள்வதற்காக ஒரு இரவு தங்கியிருந்து சென்றிருக்கிறார்கள்.

கடந்த பன்னிரண்டு மாதங்களில், தென்னாபிரிக்காவுக்கு வந்த உல்லாசப் பயணிகள் எண்ணிக்கை மில்லியனைக் கடந்துவிட்டது. 2010 இல் நடந்த உலக உதைப்பந்தாட்டப் போட்டி பல வகைகளில் தென்னாபிரிக்காவை உலகத்திற்கு அறிமுகப்படுத்தியதுடன் நாட்டின் சிவில் கட்டுமானத்தையும் நகர அபிவிருத்திக்கும் உதவியுள்ளது. முக்கிய நகரங்களான ஜோகான்ஸ் பேர்க், கேப் டவுன், டேர்பன் என்பவற்றை ஐரோப்பிய நகரங்களுக்கு நிகராக உயர்த்தியுள்ளது.

உலகத்தில் சிறந்த நட்பான நகரமாக தெரியப்பட்ட மெல்பனில் இருந்து குற்றங்கள் அதிகம் நடக்கும் ஜோகான்ஸ்பேர்க் செல்லும்போது மனப்பயம் ஏற்பட்டாலும் அதை வெல்லும் அசாத்திய துணிச்சலும் வந்தது. வாகனத்தில், ஹோட்டல் நோக்கிச் செல்லும்போது மனதில் சிறிது பயமும் பொதிகள் போல் ஒட்டிக்கொண்டு பிரயாணம் செய்தது.

நகரத்தின் மத்தியில் வாகனத்தில் செல்லும்போது சாலையில் சிவப்பு சிக்னலில்கூட காரை நிறுத்தக்கூடாது என சொல்லியிருந்தது மட்டுமல்ல பத்திரிகைகளிலும் எழுதப்பட்டிருந்தது. ஆயுத முனையில் கார்கடத்தல்கள், பாலியல் வன்முறைகள் என்பன நடப்பதாகவும் சொல்லப்பட்டிருந்தன.

பாதையோரங்களில் வீடுகள் வேலைத்தலங்கள் மட்டுமல்ல பாடசாலைகள், கார் தரிப்பிடங்கள் எல்லாம் இரும்பு கம்பிவேலியுடனும் பாதுகாப்பு கமெராக்கள் அமைக்கப்பட்டும் இருந்தன. காவலர்களும் கடமையில் இருந்தார்கள். காரில் போனபோது எம்மையழைக்க வந்த வாகனச்சாரதியிடம் இதுபற்றி பிரஸ்தாபித்தபோது “நீங்கள் பதிவு செய்த ஹோட்டல் நகரத்தின் வட பகுதியில் உள்ளது அது மிகவும் பாதுகாப்பான பிரதேசம்” என்றார்.

கடந்த இருபது வருடத்தில் ஜோகன்ஸ் பேர்க்கின் வடபகுதியில் புதிதாக சன்ரவுன் முதலான புதிய நகரங்கள் உருவாகி அங்கு மிகவும் வசதியான வெள்ளையர் மட்டுமல்ல பணம்படைத்த உள்நாட்டு வெளிநாட்டு கறுப்பு இனத்தவர்களும் மிகப்பெரிய வீடுகளில் வாழ்கிறார்கள். அந்தப் பகுதிகளில் ஹோட்டல்கள், கசினோக்களும் இருக்கின்றன.

அவுஸ்ரேலிய புவியியலாளர் ஜோர்ஜ் ஹரிசனால் முதல்முதலாக தென்னாபிரிக்காவில் ஜோகன்ஸ்பேர்க் 1884 இல் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் ஜோர்ஜ் ஹரிசன் தங்கம் தோண்டும் உரிமையை பத்து பிரித்தானிய பவுண்களுக்கு அன்றைய தென்னாபிரிக்க அரசுக்கு விற்றுவிட்டார். இந்த தங்கத்தை அடைய ஏராளமானவர்கள் அங்கு குடியேறியதால் அது பெரிய நகரமாகியது.

இதனால் தங்கம் தோண்டுபவர்களிடம் வரிவசூலிக்க அரசின் மீது பிரித்தானியர்கள் சுரங்க உரிமையாளர் சார்பாக போர் தொடுத்தார்கள். இந்தப் போரே இரண்டாவது போயர் போர் எனப்படும். இந்த யுத்தத்திலே அவுஸ்ரேலியர்களும் பிரித்தானியர்களுக்கு ஆதரவாக ஈடுபட்டார்கள். காந்தியும் இந்தப் போரில் காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி செய்தார்.

தென்னாபிரிக்க சரித்திரம் மிகவும் சுவாரஸ்யமானது.

15 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் இடையிலான வர்த்தகம் நிலவழியாக இக்கால துருக்கியின் ஊடாக தடைப்பட்டதும் கடல்வழிப்பயணங்களை தேடிய போது உருவாகிய காலனி ஆதிக்கத்தில் இதுவும் ஒன்று. இந்தியாவிற்கு பயணித்த போது போர்த்துக்கீச கப்பல் புயலால் உடைந்த இடம் தென்னாபிரிக்காவின் தென்முனையான நன்நம்பிக்கை முனை இந்த இடத்தில் சிலுவைதாங்கிய தூணை கட்டினான் பாத்தலோமிய டயஸ் என்ற போர்த்துக்கீய கப்டன்.

பத்து வருடங்கள் பின்பு போர்த்துக்கேய மாலுமியான வாஸ்கொடகாமா இந்தியாவுக்குச் செல்லும் வழியில் நத்தால் என்ற தென்னாபிரிக்காவின் கிழக்கு பிரதேசத்தை அடைந்தபோது 25 ஆம் திகதி மார்கழி மாதம் 1497 ஆம் ஆண்டு. அதனால் நத்தார் பண்டிகையின் நினைவாக நத்தால மாகாணம் எனப் பெயரிட்டு சிலுவைத் தூணை கட்டிவைத்துவிட்டு பத்து நாட் களில் இந்தியாவில் உள்ள கோவாவை அடைந்தான்.




(18ஆம் பக்கம் பார்க்க)

# ராஜகிரிய மயில் மாளிகையை மகிந்தவிற்கு வழங்க மாட்டேன்

## ஏ.எஸ்.பி. லியனகே தெரிவிப்பு



ராஜகிரியவில் அமைந்துள்ள பீக்கொக் மாளிகையை அல்லது தமது கட்சியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப் போவதில்லை என தொழிலாளர் கட்சியின் தலைவர் ஏ.எஸ்.பி.லியனகே தெரிவித்துள்ளார்.

தாம் எதிர்நோக்கியுள்ள நிலைமையின் கீழ் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு நேற்று முன்தினம் சமுகமளித்த அவர், ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோது இவ்வாறு கூறினார்.

கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு நேற்று முன்தினம் பிற்பகல் சமுகமளித்த தொழிலாளர் கட்சியின் தலைவர் ஏ.எஸ்.பி. லியனகே, ராஜகிரியவில் அமைந்துள்ள பீக்கொக் மாளிகை தொடர்பில் கடிதமொன்றை கையளித்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

தமக்குச் சொந்தமான குறிப்பிட்ட மாளிகையை விற்கப் போவதாக உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வெளியாகியுள்ளதாக, அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால், லியனகேயிக்கு எந்தவொரு அழைப்பும் விடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர குறிப்பிட்டார்.

பீக்கொக் மாளிகையில் வசிப்பதற்கு அல்லது. அதனை கொள்வனவு செய்வதற்காக முன்னாள் ஜனாதிபதியிடம் எந்தவொரு எண்ணமும் இருக்கவில்லை என ரொஹான் வெலிவிட்ட மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மகிந்த மீதான நடவடிக்கை கவனமாக கையாண்டிருக்கலாம்

## பிரதி அமைச்சர் வசந்த தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியை இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைக்கும் விடயத்தில் மிகவும் கவனமாக செயற்பட்டிருக்கலாம் என பிரதியமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி போன்ற முக்கியமான நபர்களை இலஞ்ச ஆணைக்குழுவிற்கு அழைக்கும் போது உறுதிப்படுத்தக் கூடிய சாட்சியங்கள் இருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பழிவாங்கும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தால் அதனை தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் வசந்த சேனாநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அதிகரித்துச் செல்லும் அரசியல் பழிவாங்கல்கள்

## பந்துல கவலை

நாட்டில் அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்று வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியான பழிவாங்கல் சூழ்ச்சியே தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

நாட்டைப் பிளவுபடுத்தாது பயங்கரவாதத்தை முற்று முழுதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இல்லாதொழித்தார்.

தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட போது முன்னாள் ஜனாதிபதியையும் அவரது குடும்பத்தினரையும் பாதுகாப்பதாக உறுதியளித்திருந்தார்.

எனினும், நாட்டை பாதுகாத்த தலைவர் இன்று பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றார்.

இது குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஏற்கனவே அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

# மகிந்த, கோத்தா மீதான நடவடிக்கை இரத்த வெள்ளம் ஓட வழிவகுக்கும்

## எச்சரிக்கும் மகிந்தானந்த



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் நாட்டில் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வாக்கு மூலமொன்றை அளிக்குமாறு இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு அழைக்கப் பட்டமைக்கு எதிர்ப்புத தெரிவிக்கும் வகையில் நாடாளுமன்றில் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் அனைத்து நடவடிக்கைகளும் அதன் ஆணையாளர் நாயகத்தின் தேவைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்றது.

தனியான பொலிஸ் பிரிவொன்று பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மகிந்த ராஜபக்ஷவே பாதுகாத்து வந்தார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இன்று இருப்பதற்கு காரணம் மகிந்த ராஜபக்ஷவே.

மகிந்த ராஜபக்ஷ மீது கை வைக்க வேண்டாம், அது நல்லதற்கல்ல.

பாதுகாப்புச் செயலாளர் மீது கை வைக்க வேண்டாம். அது நாட்டில் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வழியமைக்கும்.

பிரதமர் காரியாலயத்தில் வாராந்தம் கூடி யாரை கைது செய்வது என ஆராயப்படுகின்றது.

நீங்கள் செய்யும் நடவடிக்கைகளை எங்களுக்கு எதிராக செய்யுங்கள், மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக செய்ய வேண்டாம் என மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

# ஆணைக்குழுவின் அழைப்பு புத்தாண்டு தினப்பரிசு

## என்கிறார் மகிந்த

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

ஹம்பேகமுவ ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு இப்போது சவால் ஏற்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்டுள்ள அழைப்பு, புத்தாண்டுப் பரிசாகும்.

திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு நான் அமைச்சர் பதவியை வழங்கியது ஒரு ஊழல் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதியாக இருந்து கொண்டு, அமைச்சர் ஒருவரை நியமிக்க முடியாவிட்டால், அந்தப் பதவி தேவையற்றது.

எமது ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த அபிவிருத்தித் திட்டங்கள் இப்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு செயற்பாடுகளால் பொலிஸாரின் விசாரணையில் சிக்கிய எனது அரசாங்கத்தில் இருந்த சில அமைச்சர்கள், நாற்காலிகள் இருந்த போதிலும், எனது காலடியில் தரையில் அமர்ந்தனர்.

போதிபூஜைகளை நடத்தும் சுதந்திரம் கூட இப்போது இல்லை. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 114 எம்.பி.க்கள் கையொப்பம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு அழைத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மனுவில் இதுவரை 114 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பம் இட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று இரவு முழுக்க நாடாளுமன்றில் 40 வரையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளைத் தோற்கடித்த மகிந்த மீது நடவடிக்கை

## விமல் எம்.பி. விசனம்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலக்கு வைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக சதித் திட்டங்கள் தீட்டப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதனை சட்டத்தை அமுல்படுத்துவதாக கருதப்பட முடியாது. இதனை பழிவாங்கும் நடவடிக்கையாகவே கருத வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதானது உலக சமூகத்திற்கு பிழையான செய்தியை சொல்லக் கூடும் எனவும், பயங்கரவாதத்தை இல்லாதொழித்த ஜனாதிபதிக்கு இலங்கை எவ்வாறு நன்றி பாராட்டுகின்றது என்பது பற்றி விமர்சிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுனர் அர்ஜுன் மகேந்திரன் போன்றவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசாங்க ஆணைக் குழுக்களின் ஊடாக விசாரணை செய்து குற்றமற்றவர் என அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்ப வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

## முழுவீச்சுடன் மக்களுக்கு பணியாற்றி

# கல்வியை ஊக்குவிப்பவர் சந்திரகுமார்

### கிளி.மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுத்தலைவர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்ட போதும் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் மக்கள் பணியில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை அவர் தொடர்ந்தும் தேவைகளுடன் உள்ள எங்கள் மக்களுக்கு முழு வீச்சுடன் தனது பணியை மேற்கொண்டு வருகின்றார். என கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக்குழுவின் தலைவரும் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளருமான பத்மநாதன் தெரிவித்துள்ளார்.


கடந்த சனிக்கிழமை பச்சிலைப்பள்ளி இயக்கச்சியில் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமாரின் விசேட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக அமைக்கப்பட்ட கற்றல் ஊக்குவிப்பு நிலையத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் மக்களுடைய எல்லா விடயங்களிலும் அதிக அக்கறை கொண்டவர் குறிப்பாக கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற ஒருவர். அரசியல் ஆதாயங்களை கருதாது மக்களின் நலன்களை மட்டும் கருத்தில் கொண்ட ஒரு மக்கள் சேவையாளனாக பணியாற்றி வருவதோடு மட்டுமன்றி அவரோடு இருக்கின்ற எங்களையும் உற்சாகத்துடன் பணியாற்றுவதற்கு வழிநடாத்திக்கொண்டிருக்கின்றார்.

எப்பொழுதும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அவரின் சிந்தனையே எங்களுடைய பிரதேசங்களில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அதன் ஒரு வடிவமே இந்தக் கற்றல் ஊக்குவிப்பு நிலையம் இது இந்தப் பிரதேச பிள்ளைகளின் கல்வி அடைவு மட்டத்திலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவே அமையும் எனவும் குறிப்பிட்டார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்பழகன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் இராசதுரை, கிளிநொச்சி வலய கல்வித்திணைக்களத்தின் விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் குகதாசன், இயக்கச்சி, கோவில்வயல் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி மற்றும் பொது மக்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முல்லைத்தீவில் சனசமூக நிலையங்களுக்கான தளபாட உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. (160)

## விஞ்ஞான பாட அடைவு மட்டத்தை உயர்த்த விசேட செயற்றிட்டம்

இவ்வாண்டின் இறுதியில் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் வலய மட்டத்தில் விஞ் ஞான பாடத்தின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான விசேட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அதன் முதற்கட்டமாக கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை நடைபெற்று முடிந்த தேசிய மட்ட வினாத்தாள்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட விடயத்திறன் அட்டவணையின் துணையுடன் வினாப்பரம்பல்களை அடிப்படையாக வைத்து மாதிரி வினாத்தாள்களைத் தயாரித்து அதற்கான புள்ளித் திட்டத்துடன் மாணவர்களின் சுய கற்றலுக்காக வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் வலயத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாணவர்களின் சுய கற்றலுக்கான இம் மாதிரி வினாத்தாள்கள் யாழ்ப்பாண கல்வி வலய விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளர், விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரின் வழிகாட்டலுடன் விஞ்ஞான ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்டுள்ளன. தயாரிக்கப்பட்டுள்ள இவ்வினாத்தாள் தொகுப்பானது புத்தகவடிவில் அச்சிடப்பட்டு இரண்டாம் தவணை ஆரம்பத்திலேயே மாணவர்களிற்கு பயனளிக்கும் வகையில் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் மாணவர்கள் பெரும் பயனைப் பெறுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (03)






# தனது இறுதி ஒலிம்பிக் போட்டியை அறிவித்தார் ஹுசைன் போல்ட்

அடுத்த ஆண்டு பிரேசிலில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டியே தான் பங்குபற்றும் இறுதி ஒலிம்பிக் போட்டி என குறுந்தூர ஓட்ட வீரர் ஹுசைன் போல்ட் கூறியுள்ளார்.

ஒலிம்பிக் நிறைவுநாளில் 30 வயதை எட்டவுள்ள ஹுசைன் போல்ட் தனது இறுதி ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ள தயாராகி வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜமேய்க்கா நாட்டவரான ஹுசைன் போல்ட் கடந்த 2008 ஆம் ஆண்டு பெய்ஜிங் மற்றும் 2012 ஆம் ஆண்டு லண்டன் ஆகிய நகரங்களில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 100 X 4 மீற்றர் போட்டிகளில் கலந்துகொண்டு வரலாற்றுச் சாதனைகள் படைத்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் தனது சாதனைகளை தானே முறியடித்து புதிய சாதனைகள் படைப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது.

IPL

## ஐ.பி.எல். இன்றைய ஆட்டம்

ஹைதராபாத் எதிர் கொல்கத்தா
இடம் :- விசாகப்பட்டினம்
நேரம் :- மாலை 4.00 மணி

பெங்களூர் எதிர் சென்னை
இடம் :- பெங்களூர்
நேரம் :- இரவு 8.00 மணி

# சிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி

ஐ.பி.எல். தொடர் முடிந்தவுடன் இந்திய அணி சிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் 8 ஆவது ஐ.பி.எல். தொடர் எதிர்வரும் மே 24 இல் முடிகிறது. இதன் பின்னர் இந்திய அணி வங்கதேசம் சென்று 1 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடுகிறது. இது யூன் மூன்றாவது வாரத்தில் முடியும்.

இதைத் தொடர்ந்து 3 ஒருநாள் மற்றும் 2 ரி 20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க, இந்திய அணி சிம்பாப்வே செல்கிறது.

இந்த தொடரானது இரு நாடுகள் செய்து கொண்ட ஒப்பந்த அடிப்படையில் நடக்கவுள்ளது. இது இன்னும் முறைப்படி அறிவிக்கப்படவில்லை.

போட்டிகள் நடக்கும் நேரம், இடம் இன்னும் முடிவாகவில்லை. எனினும், யூலை முதல் வாரத்தில் இத்தொடர் தொடங்கலாம்.

மேலும் ஒக்ரோபர் மாதம் தென் ஆபிரிக்காவுடன் 5 ஒருநாள், 2 ரி20 மற்றும் 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா பங்கேற்கிறது.

இதன் பின், யு.ஏ.இ.யில் பாகிஸ்தானுக்கு எதிராக 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க ஏற்பாடுகள் நடக்கின்றன.

இதனிடையே, கடந்த ஆண்டு தொடரை பாதியில் இரத்துச் செய்து விட்டு திரும்பிய மேற்கிந்திய தீவுகள் அணி, இந்திய கிரிக்கெட் வாரியத்திற்கு (பி.சி.சி.ஐ.,) ஏற்பட்ட இழப்பை சரிக்கட்ட, மறுபடியும் இந்தியா வர விரும்புவதாக தெரிவித்தது. ஆனால் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு பி.சி.சி.ஐ., மறுப்பு தெரிவித்ததாக தெரிகிறது.

# தலைவர் பதவியிலிருந்து விலகினார் முகமதுநபி

(காபூல்)


ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் பொறுப்பில் இருந்து முகமது நபி விலகினார்.

இதுகுறித்து முகமது நபி கூறியதாவது, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டனாக செயற்பட்டுள்ளேன். ஆப்கானிஸ்தான் அணிக்காக என்னால் முடிந்த அளவு வெற்றி தேடித்தர முயற்சித்தேன். சமீபத்திய உலக கோப்பை தொடரில் எனது தலைமையில் விளையாடியதை மிகப் பெரிய கௌரவமாக கருதுகிறேன்.



சமீபத்திய போட்டிகளில் அணியின் செயற்பாடு மற்றும் எனது பங்களிப்பில் திருப்தி அளிக்கவில்லை. எனவே, எனது திறமையை வலுப்படுத்துவதற்காக, கப்டன் பொறுப்பில் இருந்து விலகி, வீரராக தொடர விரும்புகிறேன். இதனை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்றுக் கொள்ள வேண்டும். புதிய கப்டனுக்கு என்னால் முடிந்தவரை ஒத்துழைப்பு அளித்து அணியின் வெற்றிக்கு இணைந்து போராடுவேன். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஆதரவு தந்த ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை சகவீரர்கள் மற்றும் இரசிகர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்

# டோனியின் வெற்றி இரகசியம்



ஐ.பி.எல். தொடரில் அதிரடியாக ஆட வேண்டும் என்ற நோக்கத்தில் டோனி உட்பட பலர் தங்களது துடுப்பின் எடையை குறைத்துள்ளனர்.

கிரிக்கெட்டில் வீரர்கள் பயன்படுத்தும் துடுப்புமட்டைக்கு என, எவ்வித வரையறையும் கிடையாது. துடுப்பின் எடை, உயரம் மற்றும் அகலத்தை தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப மாற்றிக் கொள் வர். இது தொடர்பாக, துடுப்பு எடையை மாற்றி அமைப்பதில் அனுபவம் வாய்ந்த ராம் பண்டாரி கூறுகையில், டோனியின் துடுப்புமட்டைகளை, வருண் ஆரோன் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார். அவை 1,250 கிராம் எடை இருந்தன. இதை 50 முதல் 60 கிராம் எடை குறைத்துத் தருமாறு டோனி கேட்டுள்ளார். அதேபோல, துடுப்புமட்டை கம்பனிகள் டோனியின் துடுப்புகளை என்னிடம் நேரடியாக அனுப்பும். அப்போது மற்றவற்றுடன் கலந்துவிடக்கூடாது என்பதற்காக துடுப்பு நுனியில் அவரது பெயரை ஒட்டி அனுப்புவர். இதே போல ரெய்னா தனது துடுப்புமட்டைகளை (1,170 முதல் 1,180 கிராம்) லோகேஷ் ராகுல் மூலமாக கொடுத்து நுனிப்பகுதி அதிக எடையுடன் இருப்பதாக தெரிவித்தார். அதையும் சரி செய்து கொடுத்தேன் என்று தெரிவித்துள்ளார்.

# டெல்லியுடனான வெற்றி பந்து வீச்சே காரணம்




டில்லி டேர்டெவில்ஸ் அணியுடனான வெற்றிக்கு பந்துவீச்சே காரணமென கொல்கத்தா அணித்தலைவர் கம்பீர் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி குறித்து அவர் கூறியதாவது,

பந்து வீச்சாளர்களே வெற்றிக்கு காரணமானவர்கள். அவர்களுக்குத் தான் எல்லா பெருமையும் சேரும். குறிப்பாக உமேஷ் யாதவ் பந்துவீச்சு நம்ப முடியாத வகையில் அபாரமாக இருந்தது.

கடைசி ஓவரை அவர் மிகவும் சிறப்பாக வீசினார்.

மோர்னே மோர்கல், உமேஷ் யாதவ், சுனில்நரைன் ஆகிய 3 பேரும் எங்கள் அணியில் இருப்பது சிறப்பானதாகும். எத்தனை ரன்கள் எடுப்பது என்பதை விட எத்தனை புள்ளிகள் பெறுவது என்பது தான் முக்கியமானது. என அவர் கூறினார்.

டில்லி டேர்டெவில்ஸ் அணி 3 ஆவது தோல்வியை தழுவியது. தோல்வி குறித்து அந்த அணி கப்டன் டுமினி கூறும்போது, எங்களது தொடக்கமே மோசமாக அமைந்தது. விக்கெட்டுகள் சரிந்ததால் ஒன்றும் செய்ய முடியாமல் போனது.

146 ரன் என்பது இந்த ஆடுகளத்தில் போதுமான இலக்கு தான். ஆனால் பந்து வீச்சாளர்களால் சிறப்புடன் செயற்பட முடியவில்லை. இனிவரும் ஆட்டங்களும் சவாலாகவே இருக்கும் என்றார்.

# ஐ.பி.எல்.தகுதிச்சுற்று மைதானங்கள்அறிவிப்பு

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி இந்தியாவில் உள்ள பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது.

கடந்த 8 ஆம் திகதி தொடங்கிய இந்தப் போட்டியில் மே 17 ஆம் திகதிவரை லீக் ஆட்டங்கள நடக்கிறது. அதைத் தொடர்ந்து பிளே ஆப் சுற்று நடக்கிறது.

பிளே ஒப் ஆட்டங்கள் எங்கு நடைபெறும் என்று அறிவிக்கப் படாமல் இருந்தது. நேற்று நடந்த ஐ.பி.எல். ஆட்சிமன்ற குழு கூட்டதில் பிளேஆப் சுற்று நடைபெறும் இடங்கள் முடிவு செய்யப் பட்டது. முதல் தகுதி சுற்று (குவாலிபையர் 1) மும்பையிலும் (மே 1 ஆம் திகதி), வெளியேற்றுதல் ஆட்டம் (எலிமினேட்டர்) புனேயிலும் (மே 20) நடக்கிறது.

2 ஆவது தகுதி சுற்று (குவாலிபையர் 2) கொல்கத்தா அல்லது தர்மசாலாவில் (மே 22) நடைபெறும் இறுதிப்போட்டி ஏற்கனவே அறிவித்தப்படி கொல்கத்தாவில் (மே 24) நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டுக்கான சம்பியனஸ் லீக் போட்டிக்கான இடம் பற்றி எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும் கிரிக்கெட் சபை செயற்குழுவில் முடிவு செய்யப் படும்.

# ரோகித்திற்கு அபராதம்

ஐ.பி.எல். சீசன்-8 கிரிக்கெட் சுற்றுப்போட்டி இந்தியா முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் நடைபெற்று வருகிறது.

சுற்றுத்தொடரின் 19 ஆவது லீக் போட்டி பெங்களூர் சின்னசாமி ஸ்ரேடியத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் பெங்களூர் அணியை 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி வீழ்த்தியது.

இந்த ஐ.பி.எல். போட்டியில் தொடர்ச்சியாக 4 தோல்விகளை கண்ட மும்பை அணிக்கு இது முதல் வெற்றியாகும்.

இந்தப் போட்டியில் மும்பை அணி மெதுவாக பந்து வீசியது தெரிய வந்தது. இதனால் அந்த அணியின் தலைவர் ரோஹித் சர்மாவிற்கு ரூ.12 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த சீசனில் விதிக்கப்படும் முதல் அபராதம் இதுவாகும்.

# புதுவருடத்தை முன்னிட்டு முல்லையில் விளையாட்டுப்போட்டி



தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட முள்ளியவளையில் கடந்த ஞாயிறுக்கிழமை புதுவருட விளையாட்டுப் போட்டிகள் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட இராணுவத்தின் 592 ஆவது கட்டளைப் படைப் பிரிவு மற்றும் முள்ளியவளை வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி என்பன இணைந்து ஏற்பாடு செய்த குறித்த விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை இராணுவத்தின் 592 ஆவது இராணுவ கட்டளைப் பணியகத்தின் அதிகாரி பிரிகேடியர் எஸ்.ஜே.எம். ஏ.ஆர்.செனவிரத்ன மற்றும் 59 இராணுவ கட்டளைப் பணியக அதிகாரி பிரிகேடியர் முதலிகே, மேஜர் பண்டார, லெப்டினன்ட் கேணல் ஜயசிங்க, முள்ளியவளை வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் கௌரிசங்கரி, வலய உதவி முகாமையாளர் ஜே.ஜொய்ஸகுமார், முள்ளியவளை சமுதாய அடிப்படை வங்கி உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் போட்டிக்கு அனுசரணை வழங்கிய அனுசரணையாளர்கள் பலரும் கலந்துகொணடனர்.

இதன்போது சைக்கிளோட்டம், கயிறு இழுத்தல், தேங்காய் துருவு தல், கிறிஸ்மரம் ஏறுதல், சங்கீதக கதிரை, தலையணை சண்டை, வினோத உடை உள்ளிட்ட பல போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், வெற்றி பெற்ற வீரர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முல்லைத்தீவு 59 இராணுவ கட்டளைப் பணியக பிரிகேடியர் முதலிகே தலைமையில் சனிக்கிழமை நந்திக்கடலில் படகு ஓட்டப்போட்டியொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (165)

# கரவெட்டி பிரதேச கால்பந்து - இறுதியில் யங்கம்பன்ஸ்

கரவெட்டி பிரதேசத்திற்கு உட்பட்ட கழகங்களிற்கான உதைப் பந்தாட்டப் போட்டியில் தொடர்ந்து 2 ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு யங்கம்பன்ஸ் முன்னேறியது.

2015 ஆம் ஆண்டிற்கான கரவெட்டி பிரதேசத்திற்கு உட்பட்ட கழகங்களிற்கான உதைபந்தாட்ட போட்டியின் அரைஇறுதியாட்டம் நேற்றுமுன்தினம் மாலை 4:30 மணியளவில் கொலின்ஸ் மைதானத்தில் மிக விறு விறுப்பாக இடம்பெற்றது.

இப் போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோதிய கம்பர்மலை யங்கம்பன்'ஸ் விளையாட்டுக்கழகம் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதி போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. யங்கம்பன்ஸ் சார்பாக ரதன் 2 கோல்களை போட்டார்.

இறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் மோதவுள்ளது. (90)

# கரப்பந்தாட்டம்

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கரப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான போட்டி இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபெறும் அணிகளுக்கான அழைப்பு பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

போட்டியில் பங்குபெறும் அணிகள் உரிய நேரத்திற்கு வருகை தந்து நேரவிரயத்தை தவிர்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (93)

# சிறி அம்பாள் அணியிடம் வீழ்ந்தது சென் சேவியர்

(வடமராட்சி)

சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியும் சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணியும் மோதிக்கொண்ட கால்பந்தாட்டப் போட்டியில் சிறி அம்பாள் அணி 4 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றுள்ளது.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான போட்டி நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இதில் சென். சேவியர் அணியும் சிறி அம்பாள் அணியும் மோதிக்கொண்டன.

ஆட்டத்தின் இறுதிவரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டதில் இரு அணிகளுமே இரு கோல்களைப் போட்டு சம நிலையில் இருந்தன. இதனால் தண்ட உதைமூலம் வெற்றியைத் தீர்மானிப்பது என முடிவு செய்யப்பட்டது.

தண்ட உதை மூலமும் இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதிக்கொண்டன. இந்த நிலையில் சிறி அம்பாள் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (93)

# கம்பீரின் கலக்கலான அரைச்சதம் டில்லியை பந்தாடிய கொல்கத்தா




டில்லி அணிக்கெதிரான நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் கொல்கத்தா அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

டில்லி பெரோஷா கோட்லா மைதானத் தில் நடைபெற்ற 8 ஆவது ஐ.பி.எல் தொடரின் 17 ஆவது போட்டியில் டில்லி டேர்டெவில்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணி களத்தடுப்பைத் தெரிவு செய்ததையடுத்து டில்லி அணி முதலில் களமிறங்கியது.

தொடக்க வீரரான மயான்க் அகர்வால் 1 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, மற்றொரு தொடக்க வீரரான ஸ்ரீரியாஸ் ஐயர் 31 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் டுமினி 5 ஓட்டங்களில் ஆட்டமிழக்க தொடர்ந்து களமிறங்கிய மனோஜ் திவாரி 32 ஓட்டங்களும், யுவராஜ் சிங் 21 ஓட்டங்களும், அஞ்சலோ மத்யூஸ் 28 ஓட்டங்களும் எடுத்தனர்.

20 ஓவர் முடிவில் டில்லி 8 விக்கெட் இழப்பிற்கு 146 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

பந்துவீச்சில் கொல்கத்தா சார்பில் உமேஷ் யாதவ், மோர்னே மோர்கல், பியூஸ் சாவ்லா மூவரும் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதனையடுத்து 147 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணியின் தொடக்க வீரர்களான ரொபின் உத்தப்பா 13 ஓட்டங்களும், அணித்தலைவர் கவுதம் கம்பீர் 8 பவுண்டரிகளுடன் அரைசதம் கடந்து 60 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய மனிஷ் பாண்டே ஓட்டங்களின்றி ஆட்டமிழக்க. சூர்யகுமார் யாதவ் 24 ஓட்டங்களும், யூசுப் பதான் 40 ஓட்டங்களும் எடுத்தனர். 18.1 ஓவரில் கொல்கத்தா அணி 4 விக்கெட் இழப்பிற்கு 147 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக உமேஷ் யாதவ் தெரிவானார்.

# கூடைப்பந்தாட்ட சுற்று கொக்குவில் இந்து மூன்றாமிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

3 ஆம் இடத்துக்கான போட்டி நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் சென். பற்றிக்ஸ் அணியும் மோதின.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 59 :58 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதிப்போட்டி இன்று மாலை இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (93)

# புத்தாண்டை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுக்கள்

தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு 64 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

முட்டி உடைத்தல், பணிஸ் சாப்பிடுதல், கயிறு இழுத்தல், தேங்காய் துருவுதல், கிடுகு பின்னுதல், கிறிஸ்மரம் ஏறுதல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெற்று அதில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்கான பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இரவு நிகழ்வாக இசைக் கச்சேரி இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.(40)

# ஏப்ரல் நான்கில் உதயமானது மடு மாந்தை கால்பந்தாட்ட லீக்

மடு மாந்தை பிரதேச இளைஞர்களால் அதிகமாக விரும்பி விளையாடப்பட்டு வரும் கால்பந்தாட்ட விளையாட்டின் பலனகளை மடு மாந்தை பிரதேச பிரிவுகளிலுள்ள கால்பந்தாட்ட ஆர்வலர்களும் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் புதிய கழகங்களை உள்ளடக்கிய மடு மாந்தை கால்பந்தாட்ட லீக் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அங்கீகாரத்துடன் இந்தப் புதிய லீக் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி உதயமானது.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட மடு மாந்தை கால்பந்தாட்ட லீக்கின் அங்குரார்ப்பண பொதுக் கூட்டத்தின்போது தெரிவான நிர்வாகிகள் விபரம் வருமாறு:

காப்பாளர்கள்: மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எஸ். எமிலியானுஸ் பிள்ளை, அருட்சகோதரர் எஸ். சி.விஜயதாசன், அருட்தந்தை ரஜனிகாந்த்.

தலைவர்: எம். மதுரநாயகம், செயலாளர்: ஜே. அகஸ்டின், பொருளாளர்: எஸ் ஜெனிங்ஸ் உப தலைவர்கள் கேமகேந்திரன், ஏ.டொன் பிரான்சிஸ், ஏ. ஜோன்சன், ஏ அசீம், ஜே. அனஸ்டின்., உதவிச் செயலாளர்: பி.சி.ஆர். சிக்சன், உப பொருளாளர்: ஆர். டிலிப்குமார்.


மடுமாதா சவால் கிண்ணத்திற்கான முதலாவது கால்பந்தாட்டப் போட்டியில் 10 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றின. இப் போட்டிகளில் நான்கு கழகங்கள் அரை இறுதியில் விளையாடத் தகுதிபெற்றுள்ளன.

முதலாவது அரை இறுதியில் விடத்தல்தீவு நியூ யுனைட்டட் கழகத்தை வேட்டையாமுறிப்பு வள்ளுவர் கழகம் எதிர்த்தாடவுள்ளது.

இரண்டாவது அரை இறுதியில் வட்டக்கண்டல் சுடரொளி கழகமும் நெடுங்கண்டல் புனித அந்தோனியார் கழகமும் விளையாடவுள்ளன.

இப் போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டிக்கான திகதிகள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளன.

# ஜெயகாந்தன் கேள்வி பதில்



"ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்" சாதாரண மக்களிடம் உள்ள சிறப்பையும், தாம் சாதாரண மனிதர்களாக இருந்து கொண்டே அவர்கள் உன்னதத்தை அடைய முடியும் என்பதை நிரூபிக்கும் விதமாகவும் ஒரு மிகச் சிறந்த கிளாஸிக்-ஆக இந்தப் படைப்பு வெளிவந்தது. அதை எழுதும் போதும், வெளிவந்த போதும் உங்கள் மன நிலை என்ன? நீங்கள் அதை எப்படி அணுகினீர்கள்?

**ஜெயகாந்தன் :** முதலில் நான் எழுத ஆரம்பித்த போது, ஒரு நல்லவன் எப்படி மூடர்களிடம் சிக்கி அவதியுறுகிறான் என்று எழுதத் தோன்றியது.. ஆனால், எழுதத் தொடங்கியவுடன், அதைவிடவும் அவன் நல்லவனாக இருப்பதால் எல்லாவற்றையும் எப்படி எல்லாவற்றையும் நல்லவனாகவே பார்க்கிறான், என்பதையும் எழுத எண்ணினேன். Negative aspect- சிறிதும் இல்லாமல் எழுத மனதில் தீர்மானித்துக் கொண்டேன். அவன் ஒரு Universal Man. கிராமத்திலே வாழ்கிறான். பரந்து பட்ட உலகத் தன்மை எப்படி ஒவ்வொரு கிராமத்திலும் குடி கொண்டிருக்கிறது என்பதை அவன் வழியாகச் சொல்வது தான் என் நோக்கம். அது ஒரு முடிந்த நாவல் அல்ல. அதன் முடிவு எப்படி இருக்கும் என்று தெரியாமலே அதை எழுதத் தொடங்கினேன். எனக்கு மனதில் மேன்மையான ரொம்ப மேன்மையான உணர்ச்சியும், அந்த உணர்ச்சியினால் நான் தான் ஹென்றி என்று உணர்வும் கொண்டேன். என் நண்பர்களும் நானும் அப்பொழுது ஒரு லாரியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தோம். மொத்தம் அந்த லாரியில் ஏழு பேர் இருந்தார்கள் என்ற வரியோடு அந்த நாவல் தொடங்கியது.

முடிவற்ற நாவலாக எழுதிக்கொண்டே போவது தான் என் விருப்பம். ஆனால் பத்திரிகைக்காரர்களுக்கு இதை முடிக்க வேண்டும் என்று தோன்றி விட்டது. இது இன்னும் எத்தனை வாரம் வரும் என்று கேட்டார்கள். அடுத்த வாரமே முடித்து விட்டேன். அது முடித்த பிறகு நான் நிறைய எழுத வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிற விஷயங்கள் கூட மனதின் அடியாழத்துக்குப் போய் விட்டன.





நீங்கள் கேட்டது இந்த நாவல் எழுதும்போது என் மனநிலை பற்றி - மனிதர்களையும், கிராமத்தையும், இயற்கையையும் நேசிக்கிற ஒரு பறவை மாதிரி நான் அந்தக் காலத்தில் இருந்தேன். இந்தக் கதை என் உடம்பையே லேசாக்கி, பறவை போல இருந்தது என் மனநிலை. ஆனால் பறந்து கொண்டே இருக்க முடியாதல்லவா? காலூன்றி ஒரு இடத்தில் நிற்கத்தான் வேண்டியிருக்கிறது. ஆனால் இன்னும் கூட அதை மறுபடியும் தொடங்கணும். எழுத வேண்டும் என்று ஆர்வம் உண்டு. ஒரு காரியம் நிறைவேறுவதற்கு ஆர்வம் மட்டும் போதாது. வேறு சில புறச் சூழ்நிலைகளும் தேவையல்லவா? அது வரலாம் வராமலும் போகலாம்.

மிக்க நன்றி. நீங்கள் எப்படி மேம்பட்டவர்களாய் உணர்ந்தீர்களோ அது போல அதைப் படித்த எல்லாருமே உணர்ந்திருக்கிறோம் என்பது அந்த நாவலின் வெற்றிக்கு ஒரு சான்று. அவன் ஒரு விதத்திலே அந்தச் சூழ்நிலைக்கு அன்னியனாய் இருக்கிறான். எல்லாவிதத்திலும் மரபிலேயிருந்து விலகி இருக்கிறான். எல்லாவற்றையும் புதிதாய்ப் பார்க்கிறவனாய், இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று எல்லாவற்றையும் புதிதாய்ப் பார்க்கிற ஒரு மனநிலையிலே இருக்கிறான். இப்படிப் பட்ட மனநிலை உள்ளவர்களுக்குத் தான் வாழ்க்கை மகிழ்ச்சியாய் இருக்கும் என்று சொல்லலாமா? அவன் மகிழ்ச்சியாய் இருக்கிறதனால் அவன் சூழ்நிலையே மாறிவிடுகிறது. இதற்கு உந்துதல் நீங்கள் தான் என்று எமக்குத் தெரியும். இருந்தாலும் நீங்கள் அப்படிப்பட்ட மனிதர்களை சந்தித்திருக்கிறீர்களா?

**ஜெயகாந்தன் :** அவன் - ஹென்றி - ஒரு கண்டெடுக்கப்பட்ட குழந்தை. அவன் பெற்றோர்கள் எந்த தேசத்தைச் சேர்ந்தவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று எனக்கும் தெரியாது. வாசகர்களுக்கும் தெரியாது. யுத்தத்திலே வீடிழந்து நாடிழந்து பர்மாவிலிருந்து ஓடி வந்த ஒரு கணவனும் மனைவியுமல்லாதவர்கள். சபாபதிப் பிள்ளையும் அவர் நண்பன் மனைவியும் அந்தக் குழந்தையைக் கண்டெடுக்கிறார்கள். தகப்பனாக நினைத்துக் கொண்டிருக்கிற சபாபதிப் பிள்ளை அவன் தகப்பனில்லை. அவன் மம்மி அவன் தாயுமில்லை.. சபாபதிப் பிள்ளையும் தாயும், கணவன் மனைவியும் இல்லை. அன்பினாலேயும்.

---

# இந்த செல்ஃபி எப்படி?

- சைபர்சிம்மன் - 3

## 5. 360 கோண வீடியோ



இணையத்தில் யூடியூப் வீடியோக்களை பார்த்து இரசிக்க, இப்போது கூடுதலாக இன்னொரு காரணம் கிடைத்திருக்கிறது. ஆம், யூடியூப் வீடியோக்களை இனி 360 கோணத்திலும் பார்த்து இரசிக்க முடியும். இதற்கான புதிய வசதியை அறிமுகம் செய்வதாக யூடியூப் அறிவித்துள்ளது.

கூகுளுக்கு சொந்தமான யூடியூப், பிரபலமான வீடியோ பகிர்வு சேவையாக இருக்கிறது. சாமானியர்கள் முதல் திரையுலகப் பிரமுகர்கள் வரை பல தரப்பினரும் தங்கள் வீடியோக்களை பகிர யூடியூப்பை பயன்படுத்தி வருகின்றனர்.

சமையல் கலை வீடியோக்களில் துவங்கி வயிறு குலுங்கவைக்கும் காமெடி வரை, விதவிதமான வீடியோக்களை யூடியூப்பில் பார்த்து ரசிக்கலாம்.


இப்போது, வீடியோக்களை 360 கோணத்தில் பார்க்கக்கூடிய புதிய வசதியை யூடியூப் அறிமுகம் செய்துள்ளது.

இனி, வீடியோக்களை பகிரும்போது, அதன் உள்ளடக்கம் தவிர, மேடையின் தோற்றம், வானத்தின் நீல நிறம், பக்கவாட்டில் உள்ள காட்சி உள்ளிட்டவற்றை பார்த்து இரசிக்க முடியும். அது மட்டும் அல்ல. புதுமையான முறையில் படம் பிடிப்பது மூலம், ஒவ்வொரு கோணத்துக்கு ஏற்பவும் ஒருவிதமான கதை உருவாகும் வகையில் அமைக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, வீடியோ காட்சிகளை மவுஸ் மூலம் நகர்த்தி வெவ்வேறு கோணத்தில் உள்ள தோற்றத்தைப் பார்த்து இரசிக்கலாம்.

யூடியூப்பின் அன்ட்ரோய்ட் செயலி மற்றும் குரோம் பிரௌசரில், யூடியூப் இணையத்தளத்தில் இந்த வசதியில் வீடியோக்களை பார்க்கலாம். வேர்ச்சுவல் ரியாலிட்டி என்று சொல்லப்படும் மெய்நிகர் வசதி இணைய உலகில் பிரபலமாகி வரும் நிலையில், இந்த 360 கோணத்தில் வீடியோ பார்க்கும் வசதியை யூடியூப் அறிமுகம் செய்துள்ளது.

360 :கோணத்தில் வீடியோ காட்சிகள் பார்க்க - http://youtubecreator.blogspot.in/2015/03/a-new-way-to-see-and-share-your-world.html

## 6. அ. சூப்பர் மரியோ கேம் ஆடலாம்.






நீங்கள் வீடியோ கேம் பிரியரா? அப்படி என்றால் உங்களுக்கு உற்சாகம் அளிக்கும் செய்தியாக, சூப்பர் மரியோ கேமை இப்போது பிரௌசரிலேயே விளையாடலாம்.

சூப்பர் மரியோ 64 வீடியோ கேம், உலகில் பழமையானது மற்றும் பிரபலமானது. ஆனால், இதை விளையாட நிண்டெண்டோ கேம் சாதனம் தேவை. ஆனால், ரோய்ட்டன் ராஸ் எனும் புரோகிராமர், இந்த கேமை பிரௌசர் மூலம் கம்ப்யூட்டரிலேயே விளையாட வழி ; செய்திருக்கிறார்.

மேலும் விவரங்களுக்கு - https://roystanross.wordpress.com/super-mario-64-hd/?ref=producthunt

## ஆ. கூகுள் மோதலுக்கு நீங்கள் தயாரா?





இன்னொரு சுவாரஸ்யமான இணைய விளையாட்டும் அறிமுகமாகி இருக்கிறது. கூகுள் பியட் என்பது விளையாட்டின் பெயர். அதாவது, கூகுள் மோதல் என வைத்துக்கொள்ளலாம். கூகுள் தேடியந்திரத்தை பயன்படுத்துபவர்களுக்கு இந்த விளையாட்டு பிடித்துப்போகலாம்.

ஏனெனில், கூகுளில் தேடல் கோரிக்கைகளை சமர்ப்பிக்கும்போது, பாதி வார்த்தையை அடித்ததுமே மீதி என்னவாக இருக்கும் என கூகுள் தானாக யூகித்து, முழு வார்த்தை அல்லது வார்த்தைத் தொடரை முன்வைப்பதை நீங்கள் அடிக்கடி எதிர்கொண்டிருக்கலாம். இது ஓட்டோ கம்ப்ளீட் வசதி என்று குறிப்பிடப்படுகிறது.

இந்த வசதி, பல நேரங்களில் பயனுள்ளதாகத் தோன்றும். பல நேரங்களில், நாம் ஒன்று நினைக்க அதன் பரிந்துரை ஒன்றாக இருந்து வெறுப்பேற்றுவதும் உண்டு. பரவலாக, இணையவாசிகளால் தேடப்படும் பதங்களின் அடிப்படையில் இந்தத் தானியங்கி பரிந்துரைகள் அமைவதால் இப்படி!

இனி விளையாட்டுக்கு வருவோம். இந்தத் தானியங்கிப் பரிந்துரையை அப்படியே ஒரு விளையாட்டாக கூகுள் பியட் தளம் மாற்றியிருக்கிறது. இந்தத் தளத்தில், கூகுள் தேடல் கட்டம் போன்ற கட்டமும், அதில் தேடல் பதம் ஒன்றின் முதல் பகுதியும் இருக்கும். கூகுள் பரிந்துரைப்படி, மீதிப் பதம் என்னவாக இருக்கும் என நீங்கள் யூகித்து டைப் செய்ய வேண்டும். உங்கள் பதம் எந்த அளவுக்குப் பொருந்துகிறது என்பதற்கு ஏற்ப மதிப்பெண் உண்டு. பெயர்கள், கலாசாரம், கேள்விகள் மற்றும் மனிதர்கள் என நான்கு பிரிவுகளில் இருந்து தேர்வு செய்துகொள்ளலாம்.

உங்கள் கூகுள் அறிவை சோதித்துப் பார்த்துக்கொள்ள - www.googlefeud.com/

## 7. ஆமைக்கு 3டி பிரிண்டிங்



3டி பிரிண்டிங் பயன்பாடு வியக்க வைக்கக்கூடியதாக இருப்பது பற்றி பல செய்திகளை நீங்கள் படித்திருக்கலாம். சமீபத்திய செய்தி, ஒரு ஆமையின் மேல் ஓட்டினை 3டி

அபிமானத்திலேயும் ஒன்றுபட்ட ஒரு சூழ்நிலையிலே அவன் வாழ்கிறான். அதனால் அவன் அன்னியத் தன்மை இல்லாதவனாய் இருக்கிறான் என்பது தான் விஷயம். அவனை விடச் சிறந்த சுதேசி யாரும் கிடையாது. ஆனால் அவன் யார் என்று யாருக்கும் தெரியாது. அவன் ஒரு புராணகாலத்துப் பாத்திரம் மாதிரி. இன்னும் சொல்லப் போனால் ஒரு அவதார புருஷன் மாதிரி. அவன் சொந்தமில்லாதவன் போலிருக்கிறான். ஆனால் எல்லாருடனும் அவன் சொந்தம் கொண்டாடுகிறான். நகரத்திலே ஒரு ரெயில்வேத் தொழிலாளியின் பிள்ளையாக வாழ்ந்த அவன் கிராமத்திற்கு வருகி-றான். அந்தக் கிராமம் அவன் அப்பா வெறுத்து ஒதுக்கி ஓடிப் போனது. அவன் சுற்றம் அங்கே இருக்கிறது. அவர்களுடன் உறவு கொள்வதற்கு வருகிறான். அவர்களுள் ஒருவனாக ஆகப் போகிறான் என்பது இரண்டாம் பகுதியில் வரும். ஹென்றி ஹென்றிப் பிள்ளையாக மாறுவது அதன் அடையாளம் தான். எனவே அவன் அன்னியனல்ல - அன்னியன் போலத் தோற்றமளித்தாலும். வேரூன்றுகிற வரையிலும் கதை இருக்கிறது ஒரு மனிதன் வருகிறான் ஒரு வீட்டைப் புதுப்பிக்கிறான் அவன் உலகம் விரிகிறபோது அந்த அத்தியாயம் விரியும்.

# வாட்டிகன்



**வா**ட்டிகன் நகரம், போப் ஆண்டவர்களின் தலைமை நிலையமாக, கி.பி., 1377ஆம் ஆண்டு முதல், 634 ஆண்டுகளாக இருந்து வருகிறது...

வாட்டிகனில் இதுவரை, 265இற்கும் மேற்பட்ட போப் ஆண்டவர்கள், ஆட்சி செலுத்தியுள்ளனர்.

பெப்., 11, 1929 முதல், வாட்டிகன் ஒரு தனி நாடாகத் திகழ்கிறது. உலகம் முழுவதும் உள்ள, 50 கோடிக்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்களின் மதகுருவான போப் ஆண்டவர், வாட்டிகனில் தனியாட்சி செலுத்துகிறார். ரோமின் ஒரு பகுதியாக வாட்டிகன் இருந்தாலும், ரோமுக்கோ, இத்தாலிக்கோ எந்த வகையிலும் வாட்டிகன் கட்டுப்பட்டதில்லை. இத்தாலியின் தலைநகர் ரோம் ஆனால், வாட்டிகன் நகருக்கு, அதுவே தான் தலைநகர்.

உலகிலேயே மிகச் சிறிய நாடு வாட்டிகன். இந்நாட்டின் பரப்பளவு, 108 ஏக்கர். ஆனால், உலகில் மிகவும் செல்வாக்குள்ள நாடும், இது தான்.

வாட்டிகனில் வரி கிடையாது; இராணுவமும் கிடையாது. இராணுவம் இல்லாத ஒரே நாடு வாட்டிகன் மட்டுமே! ஆனால், வாட்டிகன் நகரை காவல் புரிவதற்கு, 100 போர் வீரர்கள் உள்ளனர். இவர்கள் வாட்டிகனுக்குச் சொந்தமானவர்கள் அல்ல; சுவிட்சர்லாந்து நாடு தான் வாட்டிகனுக்கு வீரர்களை அனுப்புகிறது. இதை, அந்நாடு கடமையாக கருதுகிறது.

வாட்டிகனுக்கு வந்ததும், சுவிட்சர்லாந்து வீரர்கள் போப் ஆண்டவருக்கும், வாட்டிகனுக்கும் உண்மையாக நடந்து கொள்வதாக நம்பிக்கை தெரிவித்து, உறுதிமொழி எடுத்து, பதவி ஏற்பர். இந்த, 100 வீரர்களில் ஒருவர் குறைந்தாலும், உடனே, அவருக்கு பதில் மற்றொருவர், சுவிட்சர்லாந்திலிருந்து அனுப்பப்படுவார். இவர்களுக்கு, போப் ஆண்டவரே சம்பளம் கொடுப்பார். இவர்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள்.

திருமணம் ஆகாத, 19 - 25 வயதுக்கு உட்பட்ட இவர்களுக்கு, சுவிட்சர்லாந்தில் இராணுவப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இவர்கள், போப் ஆண்டவருக்கு மெய்க் காப்பாளர்களாகவும் இருப்பர். இது தவிர, வாட்டிகனுக்கு என்று பொலிஸ் படையும் உண்டு. அவர்கள் போக்குவரத்திலும், அரசு அலுவல்களிலும் ஈடுபடுவர்.

வாட்டிகனின் மொத்த மக்கள் தொகை, ஒரு இலட்சம் பேர். போப் ஆண்டவர் அரண்மனையில், 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறைகள் மற்றும் மண்டபம், பொருட்காட்சி சாலை, அரங்கம், நூல் நிலையம், தோட்டங்கள் உள்ளன.

அரண்மனை மேல் மாடியில், போப் வாழ்கிறார். இந்த அரண்மனை, கி.பி., 5ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இதில், 200 அறைகளில் போப்பின் அலுவலகங்கள் உள்ளன. போப் அறையில் தங்க சிம்மாசனம் உண்டு; அவர் பேசுவதற்கு தங்கத்தாலான தொலைபேசியும் உள்ளது.

சில சமயம், பல்லக்கில் ஊர்வலம் வருவார் போப். இவரது அரண்மனையில் குதிரை பூட்டும், கோச் வண்டிகள், 14 உள்ளன.

டிசம்பர், ஜனவரி மாதங்களில் இங்கு, 3 பாகை செண்ரிகிரேட் வரை வெப்பம் இருக்கும் எங்கும் பனி பரவியிருக்கும். எக்காலத்திலும் வாட்டிகனுக்கு உலக மக்கள் வருகை புரிவர்...

பிரிண்டிங் முறையில் உருவாக்கிக் கொடுத்திருக்கின்றனர்.


அமெரிக்க கொலராடோவில் உள்ள விலங்குப் பாதுகாப்பு மையத்தில் தஞ்சமடைந்த அந்த ஆமைக்கு (அதன் பெயர் கிளியோபாட்ரா), ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக மேல் ஓட்டில் பிரமிட் போன்ற செதில்கள் முளைத்திருந்தன. மேலும், அந்த ஓடு பலவீன-மாகவும் ஆகியிருந்தது. ஆமைகள் பரஸ்பரம் தொடர்புகொள்ளவும், உறவுகொள்ளவும் ஒன்றன் ஓட்டின் மீது ஏறி நிற்கும் தன்மை கொண்டவை என்பதால், அவற்றுக்கு ஓடு மிகவும் முக்கியமானவை.

இந்த ஆமையின் நிலையை அறிந்த கொலராடோ தொழில் நுட்பப் பள்ளியின் ரோஜர் ஹென்றி எனும் மாணவர், அதன் மேல் ஓட்டை ஸ்கான் செய்து, அதைவைத்து 3டி பிரிண்டிங் முறையில் புதிய ஓட்டை தயார் செய்து பொருத்தியிருக்கிறார். கிட்டத்தட்ட 600 மணி நேரம் உழைத்து ஆமை மீது கச்சிதமாகப் பொருந்தும் ஓட்டுக்கான சொப்ட்வெயாரை தயார் செய்து, அதன் உடலுக்கு ஊறுவிளைவிக்காத உயிரி பொருள்களைக் கொண்டு ஓட்டை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்.

ஆமைக்கான 3டி பிரிண்டிங் பற்றி அறிய -https://www.facebook.com/media/set/?set=a.10153181963777930.1073741878.66392842929&

(தொடரும்)

## ஆல்ப்ஸ் மலைநடுவில் தூக்கம்



சுவிட்சர்லாந்து நாட்டினர், விடுமுறை கொண்டாட்டத்தின் போது, ஆல்ப்ஸ் மலையின் இரண்டு சிகரங்களுக்கு இடையே வரிசையாக ஏணை கட்டி, அதில், இரவில் தூங்குகின்றனர். அத்துடன், இந்த தொட்டிலில் படுத்தபடியே புத்தகம் படிப்பது, இசை கருவிகள் வாசிப்பது, "தம்" அடிப்பது போன்றவற்றை இயல்பாக செய்கின்றனர்.

## விதவித மெத்தை



அடிக்கடி ஏதாவது புதுமைகள் செய்து அசத்துவது, ஜப்பானியர்களின் வழக்கம். அவ்வகையில், தற்போது, மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப, படத்தில் உள்ளது போன்று, புதுப்புது வடிவத்தில் மெத்தை தயாரித்து விற்கின்றனர். இதில், படுத்தால் நன்றாக தூக்கம் வருவதாக பலர் தெரிவித்துள்ளனர்.

## தாவர புத்தர்



கனடாவில் உள்ள மொன்ட்றியல் தாவரவியல் பூங்காவில், தாவரங்களைக் கொண்டு, பல வித சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று, தாவர புத்தர். புத்தர் போன்று மிக அழகாக வடிவமைக்கப்பட்ட இச்சிலையின் முன் நின்று, சுற்றுலா பயணிகள் வழிபடுகின்றனர்.

# விஞ்ஞானி கலிலியோ

– ரவி நடராஜன் –


**பௌ**திக விஞ்ஞானி நியூட்டனுக்கும் முன் வாழ்ந்த கலிலியோ ஒரு இத்தாலியர். அவர் வாழ்ந்த 16-17 ஆம் நூற்றாண்டுகளில் கத்தோலிக்கக் கிறிஸ்தவ மத அமைப்பு, அனைத்து சிந்தனைகளின் பேரிலும் தன் கண்காணிப்பைச் செலுத்தி வந்தது என்பதோடு, எந்த மக்களும் சிந்தனை என்ற பெயரில் எதைப் பேசலாம், எதைப் போதிக்கலாம், பிரசுரிக்கலாம் என்பதை எல்லாம் கூடத் தீர்மானித்தது.

கலிலியோ தற்காலம் நாம் விஞ்ஞான முறைகள் என்று நம்பும் பல முறைகளுக்கு அடிகோலிய ஒரு சோதனை விஞ்ஞானி. இவர் பல வகைப் பொருட்களை உருட்டி, வீசி எறிந்து, நகர்த்தி, முதன் முதலாக அவ்வகை இயக்கங்களைத் துல்லியமாக அளவிட்டவர். அதாவது, காலப் போக்கின் ஒரு இயக்கத்திற்கு எத்தனை மணித்துளிகள் ஆகின்றன என்று அளவிட்டவர்.

சும்மா இருக்காமல்; சூரியனை சுற்றி பூமி சுழல்கிறது" என்ற கோப்பர்னிகஸ் தத்துவத்தை இவர் ஆதரிக்கப் போய், இவரை கத்தோலிக்க திருச்சபையின் மேலாட்சி அமைப்பு மிகவும் இம்சைப் படுத்தி விட்டது. இவரது எழுத்துக்களை வெளியிடத் தடை, வீட்டுக்குள் சிறைவாசம் என்று பலவாறு இவருடைய சுதந்திரம் பறிக்கப்பட்டதோடு, கண்காணிப்பில் இருந்ததால், தன் கருத்துகளைப் பகிர்வதற்கு மிக்க அச்சப்பட்டிருந்தார். உலகைப் படைத்த கடவுளின் சர்வ வல்லமையைச் சந்தேகிக்க எவருக்கும் உரிமை இல்லை என்று நினைத்தது கத்தோலிக்கம்.

விஞ்ஞான முறை என்று கலிலியோ போன்றோர் கருதியதோ எல்லாக் கருத்துகளையும் சோதித்துப் பார்த்து நிரூபணமான பின்னரே ஏற்பது என்ற தொடக்க கால அறிவியல் முறைமை. அது சர்வ வல்லமையுள்ள இறையின் தீர்மானத்தைச் சந்தேகிப்பதாகத் தோன்றலாம் என்று கருதியது கத்தோலிக்கம் என்பதோடு, இறையின் எண்ணக் கிடக்கை இதுதான் என்று தீர்மானிக்கவும் தமக்கு மட்டுமே உரிமை இருப்பதாகவும் கருதியவர்கள் கத்தோலிக்க திருச்சபையின் மேலாளர்கள்.

இவர்கள் ஆண்டதோ இத்தாலி நாட்டின் மையத்தில் இருந்த ரோம் மாநகரில். இத்தாலியை ஆண்டவர்கள் ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரத்தை, கருத்துகளை, தீர்ப்புகளை மீறிச் செல்லும் துணிச்சலோ, விருப்பமோ, பலமோ அற்றவர்கள்.



ஆக கலிலியோ தன் நிஜமான அறிவியல் கருத்துகளை வெளியிடத் துணிவின்றி வாழ்ந்து வந்ததோடு, தாம் செய்யும் சோதனைகளின் தன்மை பற்றிய கருத்துகள் கூட வெளியில் கசிந்து விடாமல் பாதுகாக்கும் நிலையில் இருந்தார். இப்படி இல்ல மறை, காய் மறைவாய் இருந்ததுதான் அன்றைய விஞ்ஞானம்.




வடக்கு மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ள வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரனுக்குப் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் நடாத்திய பாராட்டு விழாவில் விழா நாயகன் அழைத்துச் செல்லப்படுவதையும், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளர் எஸ்.திருவாகரன் உரையாற்றுவதையும், நல்லை குருமகா சந்நிதானம் ஆசி வழங்குவதையும் காணலாம். (01)

# மக்களுடன் நெருக்கமாக பணியாற்றுபவர்கள் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளாவர்

## அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு

மன்னார் மாவட்டத்தில் மக்களுடன் மிகவும் நெருக்கமான பணிகளை செய்யக் கூடியவர்கள் சமூர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள். இவர்களுக்கு சமூகத்தில் அங்கீகாரமுள்ளது. ஏனெனில் வறுமைப்பட்ட மக்களது வாழ்வாதாரத்துக்குத் தேவையான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினை நேரடியாக அந்த மக்கள் அனுபவிக்கச் செய்யும் நெருக்கத்துக்குரியவர்கள் என வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளுடனான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த சமுர்த்தி அதிகாரிகளின் நியமனம் இம்மாவட்டத்துக்கு கொண்டுவருகின்ற போது பல தடைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒரு சமூகத்திற்கு மட்டும் இந்த நியமனத்தை வழங்குவதாக பிரசாரங்களை செய்தனர். இதிலும் இனவாதம் பேசினர். ஆனால் எம்மைப் பொறுத்த வரையில் அவ்வாறு நாம் செய்யவில்லை என்பதை இந்த சமுர்த்தி அதிகாரிகள் நன்கறிவர். நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளவர்களுக்கு தெரியும் நாம் மிகவும் நேர்மையுடன் இதனை செய்துள்ளோம் ஆனால் இந்த நியமனங்களை வேறு நபர்களிடம் வழங்கியிருந்தால் தெரிந்திருக்கும் அவர்களது பங்கீடு எவ்வாறு என கூறிக்கொள்ளவிரும்புகின்றேன்.

அரசியல் வேறு அரச நிர்வாகமம் வேறு மக்களுக்கு பணியாற்றவே அரச அதிகாரிகள் அவர்களது பணி எந்தச் சமூகமாக இருந்தாலும் தேவையினை நாடிவரும் மனிதர்களுக்கு சேவையினை பாகுபாடுகளின்றி வழங்குவது இன்றியமையாதது. சமுர்த்தி அதிகாரிகளை பொறுத்த வரை அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றுகின்றனர்.

சமூகத்தில் வறிய மக்கள் ஒதுக்கப்பட்டவர்களா பார்க்கப்படுகின்றனர். ஆனால் அப்படிப்பட்ட மக்களிடத்தில் நாம் அன்பாக இருக்க வேண்டும். அவர்களுக்கு என்ன வேண்டும் என்று இரக்கத்துடன் கேட்டு பணியாற்ற வேண்டும்.

இந்த மாவட்டத்தில் காணப்படும் சமுர்த்தி தொடர்பான குறைபாடுகள் தொடர்பில் சமுர்த்தி அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளேன். வெகு விரைவில் அவர்கள் தமது அமைச்சின் அதிகாரிகள் சகிதம் இந்த மாவட்டத்துக்கு வருகைத் தந்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனவே அதிகாரிகளாகிய நீங்கள் தாம் பணியாற்றும் கிராம அதிகாரி பிரிவில் சமுர்த்தி குடும்பங்களின தேவைப்பாடுகள் குறித்த முழு மையான விபரங்களை திரட்டி வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (165)

# முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கு மாதாந்த நிதியுதவி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார அமைச்சால் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கான மாதாந்த நிதி உதவி வழங்கும் திட்டம் நாளை வவுனியா பம்பைமடுவிலுள்ள வைகறை நிறுவன கேட்போர் கூடத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் இந்த நிகழ்வு ஆரம்பிக்கப்படவுள்ளது.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோரை கழுத்துக்குக் கீழ் பாதிக்கப்பட்டோர், இடுப்புக்குக் கீழ் பாதிக்கப்பட்டோர் என இரு பிரிவாக மாகாண சமூகசேவைகள் அமைச்சால் தகவல் திரட்டப்பட்டிருந்தது.

மத்திய அரசின் சமூக சேவைகள் அமைச்சால் வழங்கப்படும் ஊனமுற்றோருக்கான 3000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவைப் பெறாதவர்கள் இக் கொடுப்பனவைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (90)

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் மாணவரை வழிப்படுத்தல் நிகழ்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை மாலை 4.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை என இரண்டு நாட்கள் முழுநாள் நிகழ்வாக நடைபெறும் "சிறுவர் கலை இலக்கியப் பெருவிழாவில்" மாணவர் மகிழவுடன் வாசிக்க சிறந்த நூல்கள் உடுவை. எஸ்.தில்லைநடராசா எழுதிய மந்திரக்கண்ணாடி, கடற்கன்னி, பேசும் பேனா தனி வழிப் பயணம் தவிர், அளவுக்கு மிஞ்சி ஆசைப்படாதே, திரு டாதே, பொய் சொல்லாதே ஆகிய கருப்பொருளில் மாண வரை நல்வழிப்படுத்த இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மேலும் பெற்றோருக்கு பெரும் செலவை ஏற்படுத்தாமல் ரூபா அறுபதுக்கும் ரூபா நூறுக்கும் இடைப்பட்ட மலிவு விலைகளில் இவை விற்பனை செய்யப்படவுள்ளன. (90)

# அரசாங்க வைத்தியர்களுக்கு விசேட கொடுப்பனவு அதிகரிப்பு

அரசாங்க வைத்தியர்களுக்கான மாதாந்த விஷேட கொடுப்பனவு ஏப்ரல் மாதம் தொடக்கம் ரூபா 35 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சுதேச வைத்திய அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்கனவே இந்தக் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபாவாக இருநதது. இது தொடர்பான சுற்றறிக்கை அந்த அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. அமைச்சின் செயலாளர் ஆர்.பி.திஸநாயக்காவினால் ஒப்பமிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அந்த சுற்றறிக்கையில் அதிகரித்த கொடுப்பனவு பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

புதிய சுற்றறிக்கையின்படி ஏப்ரல் மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாவுடன் மொத்தம் 35 ஆயிரத்தை அரசாங்க வைத்தியர்கள் விஷேட மாதாந்த கொடுப்பனவாக பெறுவார்கள்.

# அடிக்கல் நாட்டு விழா



வவுனியர் பறண்நட்டகல்லில் பெரியய்யா முன்பள்ளி கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்றது.

குறித்த முன்பள்ளிக்கான நிதியுதவியை பிரான்ஸ்ஸில் வசிக்கும் அன்ரி அம்மா குடும்பத்தினர் ரி.ஆர்.ரி வானொலியின் சமூகப்பணிக்குப் பொறுப்பான திரவியநாதன் ஐயாவின் ஒழுங்கமைப்பில் வழங்கவுள்ளனர்.

ரி.ஆர்.ரி.வானொலியின் ஒழுங்கமைப்பில் வன்னியில் அமையவுள்ள நான்காவது முன்பள்ளி இதுவாகும். மிகவும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட இக் கிராமத்தில் வாழும் மக்கள் அன்ரி குடும்பத்தினருக்கும், ரி.ஆர்.ரி.வானொலிக்கும் தமது நன்றியைத் தெரிவித்தனர். (160)

# முரசின் இன்றைய பலன்

(22.04.2015 புதன்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 09 ஆம் திகதி. சதுர்த்தி திதி சித்த யோகம். ரோகினி நட்சத்திரம் பி.ப. 02.43 வரை. பின் மிருகசீரிடம்.
இராகு காலம் 12.01 - 01.31 வரை. சுபநேரம் 04.31 - 06.01 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** – பரீட்சை சித்தியினால் வெளியூர் மணமகனைச் சென்றடையும் யோகம் கிட்டுதல்.

**ரிஷபம்** – கொடுத்த கடனை வசூலிக்க முறையீடு செய்தல்.

**மிதுனம்** – புதிய தொடர்புகள் இணைப்பதற்கு அனுமதி வழங்கல்.

**கடகம்** – வருமானத்தின் கணிசமான தொகை துணைவியின் நோயக்கு செலவழித்தல்.

**சிம்மம்** – சுபகாரியம் ஒன்று எதிர்பாராது ஏற்படல்.

**கன்னி** – அனுபவமில்லாத தொழிலை ஆரம்பிக்க துணைவியார் தடுத தல்.

**துலாம்** – ஏழரைச்சனி இருப்பதினால் உதவி செய்ய பின்னழித்தல்.

**விருச்சிகம்** – புதிய கற்கை நெறிபயில விண்ணப்பித்தல்.

**தனுசு** – ஏழரை 8 இல் குருவும் இருப்பதினால் புதிய முயற்சி தொடங்க விரும்பாமை.

**மகரம்** – பேதம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த விவாகம் கைகூடுதல்.

**கும்பம்** – அநாமதேய தொலைபேசிச் செய்தியால் அச்சமும் பதகளிப்பும் தக்க வைத்தல்.

**மீனம்** – வாகன விபத்து ஏற்படவிருந்த வேளை மயிரிழையில் தப்பிவிடல்.

# கிணறு வெட்டுவதற்கு நிதியுதவி வழங்கல்



போரினால் இரண்டு கால்களையும் இழந்துள்ள புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பிரபாகரன் எனும் குடும்பஸ்தருக்கு கிணறு வெட்டுவதற்காக 72,000 ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.

ரி.ஆர்.ரி வானொலியின் சமூகப்பணி பிரிவின் ஒழுங்கமைப்பில், பிரான்ஸில் வசிக்கும் செல்வரட்ணம் (வயது 89) என்பவர் குறித்த நிதியுதவியை வழங்கியிருந்தார்.

பிரபாகரன் குடும்பத்தினர் ரி.ஆர்.ரி வானொலிக்கும், கருணை உள்ளம் செல்வரட் ணத்திற்கும் தமது மன மார்ந்த நன்றிகளை தெரிவித்துள்ளனர். (160)

# க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகளில் விஞ்ஞான பாட சித்திவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது

## - யாழ். வலயக்கல்வி அலுவலகம் தெரிவிப்பு -

கடந்த 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்று முடிந்து இம மாத ஆரம்பத்தில் வெளியாகிய கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் விஞ்ஞான பாடத்தின் சித்தி வீதம் கடந்த 2013 ஆம் ஆண்டின் பெறுபேற்றுடன் ஒப்பிடுகை யில் வலய மட்டத்தில் வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளதாக யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தின் விஞ்ஞான அலகினால் வெளியிடப்பட்டுள்ள பகுப்பாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வலய மட்டத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டின் விஞ்ஞான பாட சித்தி வீதம் 72.12 ஆக காணப்பட்டிருந்த நிலையில் 2014 ஆண்டின் பெறுபேற்றின் சித்தி வீதம் 62.62 ஆக குறைந்திருப்பதுடன் இது 09.50 வீதத்தினால் வீழ்ச்சி நிலைக்கு சென்றுள்ளது.

2013 ஆம் ஆண்டின் பெறுபேறின்படி யாழ்ப்பாண கல்வி வலயத்தின் யாழ்ப்பாணக் கோட்டம் 73.1 சித்தி வீதத்தினையும், நல்லூர்க் கோட்டம் 79.4 சித்தி வீதத்தினையும், கோப்பாய்க் கோட்டம் 58.2 சித்தி வீதத்தினையும் பெற்றிருந்தன. ஆனால் 2014ஆம் ஆண்டின் பெறுபேற்றின் படி யாழ்ப்பாண கல்வி வலயத்தின் யாழ்ப்பாணக் கோட்டம் 67.28 சித்தி வீதத்தினையும், நல்லூர்க் கோட்டம் 67.87 சித்தி வீதத்தினையும், கோப்பாய்க் கோட்டம் 46.26 சித்தி வீதத்தினையும் பெற்றுள்ளது. கடந்த காலங்களினை விட இம்முறை விஞ்ஞான பாடத்தின் சித்தி வீதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியானது உயர்தரத்தில் விஞ்ஞான பாடங்களை தெரிவு செய்யும் மாணவர் எண்ணிக்கையிலும் வீழ்ச்சியைகாட்டலாம் எனவும் கல்வியாளர்கள் மட்டத்தில் பேசப்படுகின்றது.(03)

# நீராவிப்பிட்டி கிராமத்தில் மக்கள் சந்திப்பு

நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக்கட்சியின் வன்னி பிரதான அமைப்பாளருமான ஹுனைஸ் பாருக் கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தின் நீராவிப்பிட்டி கிராமத்திற்கு விஜயம் செய்தார்.

நீராவிப்பிட்டி கிராமத்திற்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர், அக்கிராமத்திலுள்ள கிராம மட்ட அமைப்புக்களை சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

அத்துடன், ஐக்கிய தேசியக்கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் பற்றி கிராம மட்ட அமைப்புகளுக்கு விளக்கங்களை வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர், கிராமத்தில் நிலவும் பிரச்சினைகளை உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து நிவர்த்தி செய்து கொடுப்பதாகவும் வாக்குறுதியளித்தார்.


இவரின் விஜயத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் முகமது ரிசாம், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பௌமி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (165)

# கற்றல் உதவி வழங்கல்



சங்கானை காணி படி ஞான வைரவரின் சங்காபிஷேகம் நேற்றுமுன்தினம் நடைபெற்றவேளை சங்கானையைச் சேர்ந்த இலண்டன் வாழ் புலம்பெயர் ஈழத்தமிழர் பகீதரனின் அனுசரணையில் யாழ்.எய்ட் ஊடாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தாய் அல்லது தந்தையை இழந்து கற்றலை மேற்கொள்ள இடர்பட்ட ஒரு தொகுதி மாண்வர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான உதவிப் பொருட்கள் ஆலய முன்றலில் வைத்து வழங்கப்பட்டன. (90)

# ஆயுர் வேதம்




## தேகராஜாதி... கற்பூராதி...

தும்மல், மூக்கிலிருந்து நீர் ஒழுகுதல், சளி, மூச்சுவிட சிரமப்படுதல் போன்ற உபாதைகளுக்குக் காரணமாக சரகஸம்ஹிதை எனும் ஆயுர்வேதநூல் குறிப்பிடுவதாவது:

1. தூசி, புகை மற்றும் குளிர்காற்று ஆகியவை நேரடியாகத் தாக்கல்.
2. குளிர்ச்சியான பிரதேசங்களில் வசிப்பதும், குளிர்ச்சியான நீரைப் பயன்படுத்தலும்
3. தன் சக்திக்கு மீறி செய்யப்படும் உடற்பயிற்சி, உடலுறவு மற்றும் அதிக நடை.
4. எண்ணெய்ப் பசையற்ற வறண்ட உணவை அடிக்கடி சாப்பிடுதல்.
5. உணவைக் குறைந்த அளவிலோ, அதிக அளவிலோ, நேரம் தவறியோ உண்ணுவதை வழக்கமாக்கிக் கொள்ளுதல்.
6. வயிற்றில் ஏற்படும் மப்புநிலையை உதாசீனப்படுத்துதல்.
7. குடலில் வயிற்றோட்டமும், மலச்சிக்கலும் உள்ள நிலை.
8. எண்ணெய் தேய்த்து குளிக்காமல் தோல் வறண்ட நிலையிலிருத்தல்.
9. மிதமிஞ்சிய அளவில் அடிக்கடி பட்டினி கிடத்தல்.
10. உடலிலுள்ள மர்ம உறுப்புகளில் ஏற்படும் அடி மற்றும் பலவீனம்:
11. ஒவ்வாமை உணவுவகைகளை உணவில் அதிகம் பயன்படுத்துதல்.
12. அடிக்கடி குடல்சுத்தி முறைகளைச் செய்து கொள்ளுதல்.
13. மலக்கழிச்சல், காய்ச்சல், வாந்தி, காச உபாதை, இரத்தக்கசிவு, கொலரா, சோகை மற்றும் விஷபாதிப்புகளின் விளைவாக நுரைமீரல் பலவீனம்.
14. உளுந்து, அவரை, நல்லெண்ணெய் ஆகியவற்றை அதிகம் உணவில் உபயோகித்தல்.
15. மாப்பண்டங்கள், தாமரைத்தண்டு, குடலில் வாயுவை அதிகரிக்கச் செய்யும் உணவுப் பதார்த்தங்கள், குடல் எரிச்சலை அதிகப்படுத்தும் உணவு மற்றும் எளிதில் செரிக்காத உணவுகளின் சேர்க்கை.
16. நீர் மற்றும் சதுப்புநிலங்களில் வாழக் கூடிய மிருகங்கள் மற்றும் பறவைகளின் மாமிசத்தை உணவாகச் சாப்பிடுதல்.
17. தயிர் மற்றும் காய்ச்சாத பால் ஆகியவற்றை உட்கொள்ளுதல்.
18. உட்புற பிசுபிசுப்பை அதிகப்படுத்தும் வெல்லம், கரும்புச்சாறு போன்றவற்றை அதிகம் சாப்பிடுதல்.
19. கபத்தை அதிகரிக்கும் உணவுகளை உண்ணுதல்.
20. தொண்டை மற்றும் மார்புப்பகுதியில் காயம்.
21. உடல் உட்புறக் குழாய்களுக்கு அடைப்பு ஏற்படுத்தும் உணவுப் பண்டங்கள்.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் நெஞ்சுக்கூட்டின் உள்ளே அமைந்துள்ள பிராணன் மற்றும் உதானன் எனும் வாயுக்கள் சீற்றமடைந்து கபத்தைத் தூண்டுவதால் அதனுடைய சீற்றமானது நுரையீரல், மூச்சுக்குழாய் ஆகிய பகுதிகளில் அடைபடுவதால் நீர்க்கோர்வை, தும்மல், மூச்சுவிட சிரமம் ஏற்படுதல் போன்றவை ஏற்படக்கூடும்.

இதுபோன்ற ஒரு நிலையில் ஆயுர்வேதம் குறிப்பிடும் சிகிச்சை முறையாவது:

தலை மற்றும் மார்புப்பகுதிகளில் மூலிகைத் தைலங்களாகிய தேகராஜாதி, கற்பூராதி, நிம்பாதி எனப்படும் தைலங்களை சிறு சிட்டிகை உப்புடன் சேர்த்து சூடாகத் தடவி மூலிகை வேர்களைக் கொண்டு காய்ச்சப்படும் நீராவியை அப்பகுதிகளில் காண்பித்து கபத்தை உருகச் செய்யவேண்டும். இதனால் வாயு தன்னிடத்திற்குத் திரும்பும்.

அதன் பிறகு அரிசியுடன் நெய், மீன் அல்லது மற்ற மிருகங்களின் மாமிச சூப்களின் வகையறாக்கள் கெட்டித்தயிர் ஆகியவற்றைச் சாப்பிடக் கொடுத்து கபத்தைத் தூண்டச் செய்து வாந்தி சிகிச்சை மூலம் வெளியேற்ற வேண்டும்.

திப்பிலி, இந்துப்பு மற்றும் தேன் ஆகியவற்றைக் கொண்டு வாந்தி சிகிச்சை செய்வது சிறப்பு. இதன் மூலம் உட்புறக் குழாய்கள் சுத்தமாவதுடன் வாயுவினுடைய சஞ்சாரமானது இந்த குழாய்களில் சுலபமாக நடந்தேறத் தொடங்கும்.

உட்புறக் குழாய்களை மேலும் சுத்தப்படுத்துவதற்காக மஞ்சள், பச்சிலை, ஆமணக்கு வேர், கோலரக்கு, மணச்சிலை, தேவதாரு, ஹரிதாளம், ஜடாமாஞ்சி ஆகியவற்றை அரைத்து ஒரு வர்த்திபோல் செய்து நெய்யில் புரட்டி அனலில் வாட்டி அதிலிருந்து வரும் புகையை நோயாளியைப் புகைக்கச் செய்வார்கள். பார்லி நெய்யில் கலந்து புகை சிகிச்சை செய்யலாம்.

ஆயுர்வேதமூலிகை மருந்துகளாகிய தசமூலகடுத்ரயம், வ்யாக்ரியாதி, வரணாதி, நயோபாயம், பலாஜீரகாதி, இந்துகாந்தம் போன்ற கஷாயங்கள் மருத்துவ ஆலோசனைப்படி சாப்பிட வேண்டிய தரமான மருந்துகள்.

பசியின்மை இருந்தால் வாஸாரிஷ்டம், கனகாஸவம், தசமூலாரிஷ்டம் போன்ற மருந்துகளை உணவிற்குப் பிறகு சாப்பிடவேண்டும்.

பசியுள்ள நிலைகளில் அகஸ்த்ய ரஸாயனம், தசமூல ரஸாயனம் போன்றவற்றைச் சாப்பிடலாம். மருத்துவருடைய ஆலோசனையின்பேரில் இவற்றைச் சாப்பிடுவது உத்தமம்.

# விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பயன்தருமரங்கள் சூறையாடல்

## - காணி உரிமையாளர்கள் கவலை -



கடந்த 25 வருடங்களாக உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து விடுவிக்கப்பட்ட வலிகாமம் வடக்குப் பகுதியிலுள்ள காணிகளிலுள்ள பயன்தரு மரங்கள், இரவு வேளைகளில் சூறையாடப்பட்டு வருவதாக மீளக் குடியேறத் தயாராகும் மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் தெல்லிப்பளை மற்றும் கோப்பாய் பிரதேச செயலாளர்களிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாகவும் கூறினர். பகல் நேரத்தில் காணிகளுக்குள் விறகு பொறுக்கச் செல்வதாகக் கூறிச் செல்லும் நபர்கள், மரங்களை அடையாளப்படுத்தி இரவு வேளையில் வந்து தறித்துச் செல்கின்றனர். வேம்பு, புளி, பலா மா ஆகிய மரங்களே இவ்வாறு தறித்துச் செல்லப் படுகின்றன. விடுவிக்கப்பட்ட இடங்களில் இருந்த வீடுகள் அழிக்கப்படடுள்ள நிலையில், மரங்கள் மாத்திரமே எஞ்சியுள்ளன. அதனையும் இவர்கள் தறித்துச் செல்வதை தடுத்து நிறுத்த வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

# தொடர்ந்தும் இழுபறியில் கூட்டமைப்பின் ஒப்பந்தம்



தமிழ்த்தேசிய கூட்டமைப்புக் கட்சிகளுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான கூட்டம், மாதிவெல நாடாளுமன்ற விடுதியில் இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

எனினும், இன்றைய கூட்டத்திலும் கட்சிகளுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகாது என நம்பத்தகுந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மேற்படி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ள அதேநேரம், இன்று புரிந்துணர்வு உடன்படிக்கை சாத்தியமில்லையென்பதையும் கட்சித் தலைவர்களுக்கு அறிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய கட்சிகளினால் தமிழரசுக்கட்சியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யாப்புகள் தொடர்பில் தமிழரசுக்கட்சியில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவை தொடர்பில் இன்றைய தினம் கலந்துரையாடிவிட்டு பிறிதொரு தினத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையை செய்து கொள்ளலாமென கட்சிகளின் தலைவர்களுக்கு மாவை அறிவித்துள்ளார்.

# பிள்ளைகள் இல்லாத போதிலும் போதைப்பொருள் கடத்தவில்லை

## - முன்னாள் பிரதமருக்கு இந்நாள் பிரதமர் பதில் -

(கொழும்பு)

எனக்கு பிள்ளைகள் இல்லை என்பது உண்மைதான். ஆனால் நான் போதைப் பொருள் கடத்துவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரட்ன, ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வாழ்க்கையைத் தொடர்புபடுத்தி நாடாளுமன்றில் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

பிள்ளைகள் இல்லாதவர் என டி.எம். ஜயரட்ன, பிரதமர் ரணிலை விமர்சனம் செய்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மட்டுமன்றி தற்போது எல்லோரும் கள்வர்கள். நாடாளுமன்றில் உள்ள அனைவரும் கள்வர்கள், கொலைகாரர்கள், கொள்ளையர்கள் என அடையாளப்படுத்தப் படுகின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் வரலாற்றுக்குச் செல்லும். சிறுவர்கள் இதைப் பற்றி என்ன நினைப்பார்கள். குற்றம் சுமத்தப் படுபவரின் பிள்ளைகளுக்கு எவ்வாறான உணர்வு ஏற்படும்.


பிரதமருக்கு என்றால் பிரச்சினையில்லை. ஏனென்றால் அவருக்கு பிள்ளைகள் இல்லைத்தானே" என டி.எம். ஜயரட்ன குறிப்பிட்டுள்ளார்.

"முதலில் நான் சொல்ல வேண்டும். எனக்கு பிள்ளைகள் இல்லை. என்றாலும் நான் போதைப் பொருளை நாட்டுக்கு கொண்டு வரவில்லை. பிள்ளைகள் இருப்பவர்கள் போதைப் பொருளை கடத்துவது கொலைக் குற்றச் செயலை விடவும் பாரிய குற்றமாகும்.

அவ்வளவுதான் நான் சொல்வேன். வேறு எதனையும் சொல்ல விரும்பவில்லை" என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளார்.

# பருத்தித்துறை இ.போ.ச மாங்குளத்தில் விபத்து

## சாரதி, நடத்துநர் படுகாயம்



(மாங்குளம்)

கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ், நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிமெந்து ஏற்றிய நிலையில் வீதியில் தரித்து நின்றிருந்த பாரவூர்தி மீது பஸ் மோதியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் இவ்விபத்தில் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், சாரதி நித்திரை தூக்கத்தில் இருந்தமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

பஸ் விபத்துக்குள்ளாகியமையடுத்து, பயணிகள் பிறிதொரு பஸ் மூலம் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

# மத்தியவங்கி ஆளுநர் குற்றமற்றவர் ஏற்க மறுக்கும் ஜாதிக ஹெல உறுமய

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் குற்றமற்றவர் என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் விநியோகம் தொடர்பிலான மோசடி குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

சட்டத்தரணிகளைக் கொண்ட இந்தக் குழுவின் விசாரணை அறிக்கை பக்கச்சார்பானது. எனவே குழுவினால் வெளியிடப்பட்டுள்ள விசாரணை அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நிதி மோசடி குறித்து நீதிமன்றிலும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் விசாரணை அறிக்கையை ஏற்க முடியாது என ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யுத்தம் இல்லையென்பது சமாதானம் ஆகிவிடாது

## நினைவுப்பேருரை ஆற்றும் சந்திரிக்கா



யுத்தம் இல்லை என்பது சமாதானம் என்றாகி விடாது என்ற தலைப்பில் கொழும்பு பம்பலப்பிட்டியில் எதிர்வரும் சனிக்கிழமை உரையாற்றவுள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக்கிளை வருடாந்தம் நடாத்தும் தந்தை செல்வா நினைவுப் பேருரைத் தொடரில் இம்முறை அந்தப் பேருரையை மேற்படி தலைப்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிகழ்த்துகிறார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 38 ஆவது நினைவு தினத்தை ஒட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் இந்த நினைவுப் பேருரை இடம் பெறும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிப்பர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் செயலாளர் சி.இரத்தினவடிவேல் மேற்கொண்டு வருகின்றார்.

## ஒரு வீதிக்கு இரண்டு பெயர்கள்

# மன்னார் நகரசபையின் பொறுப்பற்ற செயலால் விசனம்





மன்னார் பனங்கட்டுகொட்டு பகுதியின் பிரதான வீதி ஆரம்ப காலம் முதல் பனங்கட்டுகொட்டு வீதி என அனைவராலும் அழைக்கப்பட்டு வந்தது.

இதனை சிலர் கடலோர வீதி எனவும் அழைத்து வந்தனர். இந்நிலையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்களின் முயற்சியால் குறித்த வீதி மன்னார் நகரசபையின் அனுமதியுடன் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி "தனிநாயகம் அடிகளார் வீதி" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

குறித்த பெயர் மாற்றும் நிகழ்வில் நகரசபையின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர். எனினும் அண்மையில் மன்னார் நகரசபை வீதிகளுக்கான பெயரப் பலகை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது இதற்கு அமைவாக மன்னார் பனங்கொட்டு பகுதியிலுள்ள தனி நாயகம் அடிகளார் வீதி என்று அமைக்கப்பட்டிருந்த வீதியின் பெயர் பலகைக்கு அருகில் மீண்டும் பனங்கட்டு கொட்டு வீதி என புதிய பெயர் பலகை நடப்பட்டுள்ளது. இது மக்கள் மத்தியில் வியப்பையும் கடும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக மன்னார் நகர சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. என்று தெரிவிக்கப்பட்டது.

47.தாவரங்கள் மூலம் மனிதன் பெறும் நன்மை அல்லாதது
(1).மழை கிடைத்தல்
(2).உணவுக்குப் பயன்படல்
(3).மண்ணரிப்பு ஏற்படல்

48.  இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தையல் வகை
(1).குறுக்குத்தையல் (2).சங்கிலித்தையல்
(3).சோம் தையல்

(11).பின்வருவனவற்றுக்குப் பொருள் எழுதுக

49.நீர் மேல் எழுத்து போல் - ..........................................

50.பூவும் மணமும் போல - ..........................................

51.நகமும் சதையும் போல ..........................................

(12)."அச்சிறிய வீட்டினுள் வழமையைப் போன்று அன்றும் தன் கடமைகளை முடித்து மேசையின் மேல் இருந்த குப்பி விளக்கை அணைத்து விட்டு படுக்கைக்குச் செல்ல ஆயத்தமானார் அந்தத் தாய். தன் இரு குழந்தைகளுடன் அவள் நித்திரையில் ஆழ்ந்தாள். அவ்வறையில் மாத்திரம் சிறிய குப்பி விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. நடுநிசி நேரத்தில் திடீரென அவள் கண்விழித்த போது..."பந்தியை வாசித்து அடுத்து என்ன நிகழும் என்பதை 5 வாக்கியங்களுக்குள் எழுதி முடிக்க

52..........................................

53..........................................

54..........................................

55..........................................

56..........................................

(13).பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக

57.தேன் கூட்டத்தின் தலைவர் ஒரு பெண் தேனியாகும் ( )

58.கிரகம்பெல் என்பவர் தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தார் ( )

59.வீணை ஒரு நரம்புக்கருவியாகும் ( )

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01).01.3 | 02.1 | 03.3 | (02).04.கரை | 05.சுத்தம் | 06.புதல்வி |
| | | | | 11.2 | 12.3 |
| (03).07.1 | 08.2 | 09.1 | 10.1 | (04).17.1 | 18.3 |
| 13.2 | 14.3 | 15.3 | 16.1 | 22.சிறகு அமைப்பு | 23.கடவுச்சீட்டு |
| 19.3 | (05).20.Srilankan airline | | 21.புகை | (07).28.வயிற்றோட்டம் | 29.E |
| 24.Airport | (06).25.2 | 26.2 | 27.1 | | |
| | | | 32.1 | (09).32.தபாலதிபர், தகவல்பரிமாறல் | |
| 30.2 | (08).31.1 | | | 37.2 | 38.2 |
| (10).33.C | 34.E | (11).35.2 | 36.2 | 42.XVII | 43.XXIX |
| 39.3 | (12).40.IX | | 41.XI | 48.4 | (14).49.1 |
| 44.XXI | (13).45.2 | 46.4 | 47.2 | | |
| 50.2 | 51.1 | | | | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**







# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01).தரப்பட்ட தகவல்களை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக

> மவுஸ்ஸாஅல்ல தமிழ் வித்தியாலயம்
> லிந்துள்ள,
> தலவாக்கலை
>
> **வருடாந்தம் ஒழுங்குசெய்யப்பட்ட கல்விச்சுற்றுலா**
>
> எமது பாடசாலையில் 10ஆவது தடவையாக மீண்டும் கல்விச்சுற்றுலாவை ஒழுங்கு செய்துள்ளோம். என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
> (01).பாடசாலையின் முதலாம் பிரிவினர் தரம் 1 - 5 வரை
> (02).கனிஷ்ட பிரிவினர் தரம் 6 - 9 வரை
> (03).பாடசாலையின் சிரேஷ்ட பிரிவினர் தரம் 10 - 13 வரை
>
> முதலாம் தவணைக்குள் தரம் 1 - 5, தரம் 6 - 9 வரை உள்ள மாணவர்களை அழைத்துச் செல்லல் மூலம் அவர்களுக்கு தெரியப்படுத்துவது
> * கோள் மண்டபம், கொழும்புத்துறைமுகம், சுதந்திர சதுக்கம், காலி முகத்திடல், . நாடாளுமன்றம், களுத்துரை விகாரை, தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை
> * முதலாம் தவணையின் மார்ச் மாத இரண்டாம் வாரத்தில் இச்சுற்றுலா செல்ல முடிவெடுக்கப்பட்டுள்ளது
> * இது பற்றிய மேலதிகத் தகவல்களை வகுப்பாசிரியரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்
>
> நன்றி,
> சுற்றுலா ஏற்பாட்டாளர்கள்,
> மவுஸ்ஸாஅல்ல தமிழ் வித்தியாலயம்

01.மவுஸ்ஸாஅல்ல தமிழ் வித்தியாலயத்தில் கடந்த வருட சுற்றுலா எத்தனையாவது தடவையாக நடைபெற்றது? ..........................................

02.அடுத்தவருடம் அவர்கள் எத்தனையாவது தடவையாக சுற்றுலா செல்வார்கள்? ..........................................

03.இம்முறை சுற்றுலா செல்ல எத்தனை பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்? ..........................................

04.ஒத்தசொல் தருக
(i).கங்கை .......................... (ii).கடல் ..........................

05.உடுக்கள் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய இடம் ஒன்றுக்குச் செல்கின்றனர் அவ்விடம் எது? ..........................

06.இச்சுற்றுலா தொடர்பான மேலதிக விபரங்களை யாரிடம் பெற்றுக் கொள்ளலாம்? ..........................

07.இதனை எத்தனையாம் தவணையில் செல்ல ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது? ..........................

08.மாணவர்கள் அவதானிக்கக் கூடிய கடற்கரைப் பிரதேசங்கள் இரண்டை எழுதுக
(i).......................... (ii)..........................

(02).பின்வரும் சொற்களை சிங்களத்தில் எழுதுக

09.கிரவா (கிளி) ..........................

10.கபுடா (காகம்) ..........................

11.குகுளா (சேவல்) ..........................

12. பறவியா (புறா) ..........................................

(03). கீழே சிறுவர் நூலகம் ஒன்றில் உள்ள புத்தகங்கள் தொடர்பான விபரங்கள் தரப்பட்டுள்ளன அதனைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக

| நூலகத்தில் உள்ள புத்தக வகைகள் | புத்தகங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | தமிழ்மொழி | ஆங்கிலமொழி |
| 01. வரலாறு நூல்கள் | 100 | 75 |
| 02. சிறுவர் கதைப்புத்தகங்கள் | 500 | 350 |
| 03. விஞ்ஞானம் | 80 | 30 |
| 04. கணிதம் | 60 | 30 |
| 05. தமிழ் மொழி | 210 | 05 |

13. இந்நூலகத்தில் உள்ள மொத்த தமிழ்மொழி புத்தகங்களின் எண்ணிக்கை யாது? ..........................................

14. இங்கு குறைந்தளவில் எவ்வகையான புத்தகங்கள் காணப்படுகின்றன? ..........................................

15. ஆங்கிலமொழியில் உள்ளதைப் போன்று இருமடங்கு அளவுள்ள புத்தகம் தமிழ்மொழியில் உண்டு அது என்ன வகையான புத்தகம்?

..........................................

16. தமிழ்மொழிப் புத்தகங்களை அவற்றின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஏறுவரிசைப்படுத்தினால் இரண்டாவதாக வரும் புத்தக வகை எது?

..........................................

17. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு வகையான புத்தகங்களிலும் நீர் காணும் ஒற்றுமை என்ன? ..........................................

18. வரலாறு நூல்களை 5 மடங்கால் அதிகரித்தால் அது எவ்வகையான புத்தகங்களுக்கு சமனாகும்?

..........................................

19. இந் நூலகத்தில் உள்ள மொத்தப் புத்தகங்களின் எண்ணிக்கை எத்தனை? ..........................................

20. ஒரு வரலாறு புத்தகத்தின் விலை ரூ 75 எனின், இங்குள்ள மொத்த வரலாறு புத்தகங்களின் பெறுமதி என்ன?

..........................................

(04). குழம்பிக்கிடக்கும் சொற்களை ஒழுங்கான வாக்கியம் ஆக்குக

21. மாணவர்கள் / ஏற்பாடு / சுற்றுலா / செய்தனர் / கல்விச் / ஒன்றை

..........................................

22. சுற்றுலா / விரும்பினர் / செல்ல / பெருமளவு / மாணவர்கள்

..........................................

23. பல்வகைப்பட்ட / பார்க்க / இடங்களை / முடிந்தது / மூலம் / அவர்களால் / சுற்றுலா

..........................................

(05). பின்வரும் ஆங்கிலச்சொற்களை தமிழில் எழுதுக

24. Birds ..........................................

25. class teacher ..........................................

26. Habits ..........................................

27. chest ..........................................



(06). "பாடுவேன், ஊதுவேன்" எனும் சொற்களை பொருத்தமான இடைவெளியில் இடுக

28. குழலை .......................... நான் பாட்டுப் ..........................

29. பாட்டுப் .......................... நான் குழலை ..........................

(07). பின்வரும் பொருட்கள் பயன்படும் தொழில் ஒன்றை எழுதுக

30. வாள் .......................... 31. சவற்காரம் ..........................

32. பேனை .......................... 33. கத்தரிக்கோல் ..........................

(08). பின்வருவனவற்றைக் கணிக்க

34.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | D | 4 | M | | C | C | 8 |
| + | E | N | M | - | G | 4 | R |
| | 10 | 5 | 6 | | 2 | 1 | 5 |

01. M இன் பெறுமானம் ..........................

02. E = 3 எனின் D இன் பெறுமானம் ..........................

03. R க்காக வரவேண்டிய எண் ..........................


04. C க்காக வரவேண்டிய எண் ..........................

35. தினமும் இரவு நித்திரைக்குச் செல்லுமுன் அரைப்பங்கு மாத்திரை வீதம் குடிக்கும் நோயாளி ஒருவருக்கு 20 நாட்களுக்குத் தேவையான மாத்திரைகளின் எண்ணிக்கை யாது?

..........................................

36. இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கையைக் காண்க

..........................................



37. 

இப்படத்தில் காட்டப்பட்டுள்ள மருந்துக் குப்பியானது 20ml அளவு நீரைக்கொள்ளக் கூடியது இவ்வாறான 100 குப்பிகள் கொள்ளக் கூடிய நீரின் அளவு

01. எத்தனை மில்லிலீற்றர்? .......................... 02. எத்தனை லீற்றர்? ..........................

38. கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பொடிமெனிக்கே புகையிரதம் மு.ப 9.45 மணியளவில் புறப்பட்டு 8 மணித்தியாலங்கள் 20 நிமிடம் கழித்து பதுளையை அடைந்தது. அது பதுளையை அடைந்த நேரத்தை 24 மணி நேர கடிகாரத்தில் தருக

..........................................

(09). பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக

39. இலங்கையின் மிக நீளமான நதி ..........................

40. இலங்கையின் தேசிய விளையாட்டு ..........................

41. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் ..........................

42. இலங்கையின் தேசிய மலர் ..........................

| | |
|---|---|
| நீலோற்பலம் | தாமரை |
| கரப்பந்தாட்டம் | கிரிக்கெட் |
| | மகாவலிகங்கை |
| திருகோணமலை | கொழும்பு |

(10). சரியான விடையின் கீழ் கோடிடுக.

43. பச்சை நிற தண்டைக் கொண்ட தாவரம்
(1). கற்றாளை (2). மாமரம் (3). குரோட்டன்

44. முலையூட்டி விலங்கொன்று.
(1). புறா (2). அட்டை (3). வெளவால்

45. நீரில் வாழும் தாவரம் ஒன்று
(1). தாமரை (2). ரோசா (3). மல்லிகை

46. மழை காரணமாக ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்கும் முறை ஒன்று
(1). மழை நீரை நடை பாதையில் செலுத்துதல்
(2). மண்ணில் புற்களை வளர்த்தல்
(3). மண்ணைக் கொத்தி பதனிடல்



வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் விசேட செயற்குழுக்கூட்டமும் லயன் எஸ். பத்மநாதனின் (பருத்தித்துறை வர்த்தகர் சங்கத் தலைவர்) 70 ஆவது பிறந்ததின விழாவில் லயன் எஸ். கமலேஸ்வரன் உரையாற்றுவதையும், பருத்தித்துறை நகரசபையினர் வாழ்த்துப்பத்திரம் வழங்குவதையும், காணலாம். (01)

# கல்விச் செயற்பாடுகளில் சமூக வேறுபாடுகள் இருக்கக்கூடாது

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

கல்விச் செயற்பாடுகளில் சமூக முரண்பாடுகளும்,வேறுபாடுகளும் இருக்கக் கூடாது அவ்வாறு இருப்பின் அது ஆரோக்கியமான கல்விச் செயற்பாடுகளுக்கு உகந்ததல்ல என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பச்சிலைப்பள்ளி இயக்கச்சியில் நாடாளுமன்ற உறுப்பினரின் விசேட நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட கற்றல் ஊக்குவிப்பு நிலையத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பதினொரு இடங்களில் இவ்வாறு கற்றல் ஊக்குவிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் முதலாவதாக இயக்கச்சியில் அமைக்கப்பட்ட இந்த நிலையத்தினை மாணவர்களின் செயற்பாட்டுக்காக திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் எனவே இதனை இந்தப் பிரதேச மக்கள் ஒற்றுமையாக நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.அது மிக மிக முக்கியமானது எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்.



கல்வி என்பது எல்லா வகையான முரண்பாடுகளுக்கும்,சமூக வேறுபாடுகளுக்கும் அப்பாலானது அதனைக் கடந்து கல்விச் செயற்பாடுகள் கொண்டு செல்லப்பட வேண்டும். இன்றும் எங்கள் மத்தியில் பல்வேறு வேறுபாடுகள் உண்டு ஆனால் அதனை நாம் கல்வியில் காட்டக் கூடாது தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்களும், பெற்றோர்களும் கல்வியில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றார்கள் குறிப்பாக இளம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் அதிக ஆர்வம் செலுத்துகின்றனர். எனத்தெரிவித்தார்.

தற்போது பிள்ளைகள் மத்தியில் ஏற்பட்டுள்ள கல்வி மீதான ஆர்வத்தை பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும். இந்தக் கற்றல் ஊக்குவிப்பு நிலையத்தினை இந்தப்பிரதேச மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஊர்வணிகன்பற்று,இயக்கச்சி, வைஎம்சிஏ குடியிருப்பு, கொற்றாண்ரர்குளம், கோவில் வயல்,சங்கத்தார்வயல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு பொருத்தமான இடத்தில் இந்த நிலையம் அமைந்துள்ளது. எனவே இந்த நிலையத்தின் நோக்கம் நிறைவேற்றப்படும் அளவுக்கு இதன் செயற்பாடுகள் அமையவேண்டும் அதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டஅவர் கற்றல் ஊககுவிப்பு நிலையத்தினை அமைப்பதற்கு தனது காணியை வழங்கிய ஜய்ரா பொனிபஸிக்கு தனது நன்றியையும் தெரிவித்துக்கொண்டார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்பழகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் இராசதுரை, கிளிநொச்சி வலய கல்வித்திணைக்களத்தின் விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் குகதாசன்,இயக்கச்சி,கோவில் வயல் கிராம அபிவிருத்திச் சங்கங்கங்களின் தலைவர்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி மற்றும் பொது மக்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# டெங்கு பரவுதல் தொடர்பாக 34 வழக்குகள் பதிவு

யாழ். சுற்றுச் சூழல் பிரிவில் மார்ச் மாதத்தில் மட்டும் டெங்கு பரவல் தொடர்பான 34 வழக்குகள் பதிவாகியுள்ளன.

கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் டெங்கு பரவுவதற்கு ஏதுவான காரணிகள் இருந்ததாக சுற்றுச்சூழல் பிரிவினரால் கண்டறியப்பட்டு 34 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நீர் தேங்கி நிற்றல், குப்பை கூழங்கள், கோம்பைகள் காணப்படல் என்பன தொடர்பாகவே மேற்படி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவு செயயப்பட்ட வழக்குகளுக்கு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. இதில் 34,000 ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக சுற்றுச்சூழல் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (25)

# தேர்தலில் போட்டியிட மைக்கல் பெரேரா தயார்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதாக அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என வெளியான தகவல்களில் உண்மையில்லை.

20 ஆண்டுகளின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமொன்றை அமைக்க மக்கள் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

ஜாஎல தொகுதி மக்களையும் கம்பஹா மாவட்டங்களையும் நிர்க்கதியாக்கும் திட்டமில்லை.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட முழு அளவிலான ஆயத்தத்துடன் இருக்கின்றேன்.

என்னை மேற்கோள்காட்டி வெளியான செய்திகளில் உண்மையில்லை என ஜோசப் மைக்கல் பெரேரா ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 19ஆவது திருத்த சட்டத்துக்கு ஒத்துழைக்குமாறு கோரிக்கை

19ஆவது திருத்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மாதுலுவாவே சோபித தேரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும்,

நீங்கள் எக்கட்சியை சார்ந்திருப்பினும், எம்மதத்தை சார்ந்திருப்பினும், 19இற்கு ஆதரவு வழங்குங்கள் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் நாடாளுமன்றத்தில் 19ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவது வெறுமனே அரசாங்கத்தின் வெற்றியல்ல, நாட்டு மக்களின் வெற்றி என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலஞ்ச ஊழல் தவிர்ப்பு விடயங்களில் பிரதமர் தலையிட முடியாது

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் விடயங்களில் பிரதமரோ அல்லது நாடாளுமன்றமோ தலையீடு செய்ய முடியாது என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.அவ்வாறு தலையீடு செய்ய முயற்சித்தால் அதனை நாம் எதிர்க்கின்றோம். அரசியல் சாசனத்தின் 35ஆம் சரத்து குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கு எதிரான வழக்கு ஒன்றின் போது பதவியில் இருக்கும் காலத்தில் மட்டுமே வழக்குத் தொடர முடியாது என நீதிமன்றம் அறிவித்திருந்தது. அனைவருக்கும் சட்டத்தை சமனாக்கும் நோக்கில் 19ஆவது திருத்தச சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு சாட்சியாளராகவே அழைக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை பாதுகாப்பதனைப் போன்றே, பிரஜைகளின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

# அமைய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு

கல்வித்துறை சார்ந்த அமைய ஊழியர்களாகப் பணியாற்றி வநதவர்களை நிரந்தர ஊழியர்களாக உள்வாங்க கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இணங்கியிருப்பதாக கல்விசாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கல்வித்திணைக்களம் சார்ந்த தேசிய பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் விஞ்ஞானபீடத் துறைகளில் கடமையாற்றும் அமைய ஊழியர்களையே நிரந்தரமாக்க இணங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கல்விசார்ரா ஊழியர் சங்கம் கல்வி அமைச்சரை சந்தித்து விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டதன் பேரில் இம்மாதம் தொடக்கம் அவர்களை நிரந்தரமாக்கும் நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

இத் தீர்மானத்தின் முதற் கட்டமாக நாடுபூராகவும் உள்ள 250 ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக கல்விசாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

10 வருட சேவைக் காலத்தை 5 வருடங்களாகக் குறைத்து 8 ஆம் வகுப்பு சித்தியடைந்த (ஆனால் இதுவரை பதவி உயர்வு கிடைக்காத)வர்களுக்கு "பாடசாலை அலுவலக உதவியாளர்" பதவியைப் புதிதாக ஏற்படுத்தி இப் பதவிக்கு அவர்களை நியமனம் செய்யப்படவிருப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கல்வி சாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

# அகதிகளின் பிரச்சினையை தீர்க்க தயாராகவுள்ளது சுவிஸ் அரசு

## சுவிஸ் சட்ட அமைச்சர் தெரிவிப்பு



அகதிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க ஐரோப்பிய நாடுகள் கொண்டுவரும் பொதுவான தீர்விற்கு சுவிஸ் அரசு அனைத்து வகையிலும் பங்கெடுக்கும் என சுவிஸ் சட்ட அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களில் லிபியாவிலிருந்து இத்தாலிக்கு சட்டவிரோதமாக படகுகளில் வந்த போது மத்திய தரைக்கடல் பகுதியில் விபத்து ஏற்பட்டு சுமார் 1000 அகதிகள் பலியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் மாலை அகதிகள் பலியாவதைத் தடுக்கும் நோக்கில் ஐ.நா சபை அவசர ஆலோசனைக் கூட்டம ஒன்றை நடாத்தியது.

இதுகுறித்து சுவிட்சர்லாந்தின் சட்ட அமைச்சர் பேசுகையில், மரணப்பிடியில் சிக்கித்தவிக்கும் அகதிகளைப் பாதுகாக்க சுவிஸ் அரசு அனைத்து உதவிகளையும் வழங்கவுள்ளது.

அகதிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க எண்ணற்ற திட்டங்கள் இருக்கிறது. ஆனால், அதற்கான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது கடினமாகவுள்ளது.

ஏற்கனவே போராடிக்கொண்டிருக்கும் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இதுபோன்ற தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது மிகக் கடினமாகவுள்ளது.

கடந்த மார்ச் மாதம் சிரியாவைச் சேர்ந்த 3000 அகதிகளை அடுத்தடுத்த 3 வருடங்களில் சுவிஸ் நாட்டில் குடியேற அரசு ஒப்புதல் வழங்கியதுடன், அந்தத் திட்டத்திற்காக சுமார் 50 மில்லியன் பிராங்குகளும் ஒதுக்கியுள்ளது.

ஆனால், தாய்நாடுகளை விட்டு சிரியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு அகதிகள் சட்டவிரோதமாக நுழைய முயற்சி செய்து வருகின்றனர் என பேசியுள்ளார்.

எனவே இதனைத் தடுக்க ஐரோப்பிய நாடுகள் முழு ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐரோப்பிய ஐக்கிய நாடுகளின் பட்டியலில் சுவிஸ் அரசு இணையாததால், நேற்று முன்தினம் நடைபெற்ற அவசர ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கத்திகளுடன் வந்த விமானி அதிர்ச்சியில் உறைந்த அதிகாரிகள்



பிரித்தானிய விமான நிலையத்தில் விமானி ஒருவர் கத்திகளுடன் வந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மன் விமான விபத்து நடந்தது முதல் பிரித்தானியாவில் விமானிகளைத் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பிரித்தானியாவின் ஹீத்ரு விமான நிலையத்தில் போயிங் 777 ரக விமானம் ஒன்று 260 பயணிகளுடன் தரை இறங்கியது.

இதனையடுத்து விமான ஊழியர்களின் உடைமைகளை சோதனை செய்வதில் பொலிஸ் அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர்.


அப்போது அந்த விமானத்தின் விமானி ஒருவரது கைப் பையில் ஏராளமான கத்திகள் இருந்தன.

இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அதிகாரிகள், அவரை கைது செய்து விசாரணை நடத்தினர்.

பின்னர் அவர் பிணையில் விடப்பட்டார். இச்சம்பவம் காரணமாக அந்த விமானம் நேற்று முன்தினம் வரை ஹீத்ரு விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஏமனுக்கு புறப்பட்டது அமெரிக்க போர்க்கப்பல்

உலகச் செய்திகள்



ஏமனில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு உதவும் ஈரானுக்கு எதிராக விமானம் தாங்கிய அமெரிக்க போர்க் கப்பல் புறப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஏமனில் அதிபர் ஹ்தி ஆதரவு படைகளை எதிர்த்து ஈரானின் ஆதரவோடு ஷியாப் பிரிவு ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் சண்டையிட்டு அந்நாட்டில் முன்னேறி வருகின்றனர். பல நகரங்களை அவர்கள் தங்கள் வசம் வைத்துள்ளனர்.

ஈரானைத் தவிர இவர்களுக்கு ஏமன் முன்னாள் அதிபர் அலி அப்துல்லா சலே ஆதரவு படையும் சண்டையில் ஈடுபடுகின்றது.

ஏமன் அரசுக்கு ஆதரவாக சன்னி பிரிவு மக்கள் அதிகம் நிறைந்த சவுதி அரேபியா தலைமையில் வளைகுடா நாடுகளின் படைகள் போர் நடாத்தி வருகின்றன.

கடந்த மாதம் 26-ஆம் திகதி முதல் நடந்து வரும் கடுமையான போரில் இதுவரை சுமார் 700 பேர் பலியாகி உள்ளனர். சுமார் 3000 பேர் படுகாயம் அடைநதுள்ளனர். அந்த நாட்டின் பெரும்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துவிட்டனர்.

நிலைமையை மோசமாக்கி வரும் ஹவுத்திகளுக்கு ஈரான் ஆதரவு அளிப்பதை பல நாடுகள். கண்டித்துள்ளன. அமெரிக்கா இதற்காக தொடர்ந்து ஈரானை எதிர்த்து வந்த நிலையில், அமெரிக்காவின் இரண்டு போர்க் கப்பல்கள் ஏமன் நாட்டை நோக்கி விரைந்து வந்துகொண்டிருப்பதாக அமெரிக்க பென்டகன் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

சவுதி அரேபிய படைகள் நடாத்தும் போருக்கு அமெரிக்கா ஆதரவாக இருக்கும் நிலையில் அவர்களுக்கு நேரடி உதவியை அமெரிக்கா இதுவரை வழங்கவில்லை.

தடை செய்யப்பட்ட ஆயுதங்களை ஈரான் அரசு ஹவுத்தி படைகளுக்கு வழங்கி வருவதை கண்காணிக்கும் விதமாக தற்போது அமெரிக்கா தனது அதிநவீன இரண்டு போர்க் கப்பல்களை ஏமனுக்கு அனுப்பியுள்ளது.

இதன் மூலம் இந்த விவகாரத்தில் ஈரானை மட்டும் நேரடியாக அமெரிக்கா எதிர்க்க முற்பட்டுள்ளது.

யு.எஸ்.எஸ். தியோடர் ரூஸ்வெல்ட் என்ற அந்த அமெரிக்க போர்க் கப்பல் ஏமன் கடற்பகுதியில் நிறுத்தப்பட்டு, ஆயுதங்களை ஏற்றி வரும் ஈரான் கப்பல்களை நிறுத்தும் என்று கூறப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க பாதுகாப்புத்துறை அதிகாரி கேனல் ஸ்டீவ் வாரன் கூறும்போது, ஏமன் கடலை நோக்கி தியோடர் ரூஸ்வெல்ட் புறப்பட்டது. ஏடன் துறைமுகத்துக்கு நுழையும் ஈரான் கப்பல்களை இக்கப்பல் கண்காணித்து தடுத்து நிறுத்தும்" என்றார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். இன் முன்னேற்றம் 90ஆயிரம் மக்கள் தப்பியோட்டம்

ஈராக் நாட்டில் அன்பர் மாகாணம் நோக்கி ஐ.எஸ்.ஐ.எஸ்.படைகள் முன்னேறி வருவதால், சுமார் 90 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அந்த மாகாணத்தில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்கள் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

அன்பர் மாகாணத்தை நோக்கி ஐ.எஸ்.ஐ.எஸ். படைகள் வேகமாக முன்னேறி வருகின்றன. சில நாட்களுக்கு முன்பு அந்த மாகாணத்தின் தலைநகரான ரமதி மற்றும் சில கிராமங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பினரால் கைப்பற்றப்பட்டன. அதன் காரணமாக மக்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

இதுவரை சுமார் 90 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு, நீர் மற்றும் இருப்பிடம் ஆகியவற்றை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் பலரும் வெளியேறி வருவதாலும், கடைகள் பலவும் மூடப்பட்டிருப்பதாலும், ரமதி ஆள் நடமாட்டம் இன்றி காட்சியளிக்கிறது.

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே

## இருபது ஆண்டுகளின்......

இதன்பின் டச்சுக்காரர் பிரித்தானியர் என உருவாகிய தென் ஆபிரிக்க பிரதேசம் இலங்கை இந்திய காலனி ஆட்சியோடு மிகவும் நெருங்கிய உறவு கொண்டது. டச்சுக்காரரால் இலங்கை இந்தியா மலேசியாவில் இருந்து அடிமைகளாக பலர் கொண்டு செல்லப்பட்ட வரலாறு பிரித்தானியர்கள் இந்திய மக்களை கரும் புத்தோட்டத்தின் கூலிகளாகக் கொண்டு சென்றதிற்கு முந்தியது.

என்க்கு மிகவும் வியப்பளித்த விடயம் யாழ்ப்பாணம் கோட்டை கட்டிய காலத்திய வரைபடம் கேப் டவுண் அடிமைகள் பற்றிய நுண்பொருட்காட்சிச் சாலையில் இருந்ததுதான். அதை புகைப்படம் எடுக்கக் கூடாது என்றும் எழுதப்பட்டிருந்து.


அடிமைகள் பற்றிய நுண்பொருட்காட்சி சாலையில் நின்றபோது எனக்கு உருவாகிய சிந்தனையை இங்கு எழுதவேண்டும். மனித வரலாற்றில் மனிதர்கள் சக மனிதர்களுக்கு செய்த கொடுமைகளில் ஐரோப்பியர் அமெரிக்க கண்டத்திற்கு செய்த அடிமை வியாபாரம் முதன்மையானது.

அதைத்தொடர்ந்து பின்னர் அமெரிக்க அடிமை முறை ஐரேப்பாவில் யூதர்களின் இன ஒழிப்பு தென்னாபிரிக்காவில் நிற பேத அரசாங்கம் என்று இருந்து அதுவும் ஒழிக்கப்பட்டு இருபது வருடமாகியது. இந்தக் கொடுமைகளில் சம்பந்தப்பட்டவர்கள் ஐரோப்பியர்கள். அவை முடிவுக்கு வந்து விட்டன.

நமது இலங்கை - இந்தியாவில் நடக்கும் சாதி ரீதியான பாகுபாட்டு கொடுமை மிகத் தொன்மையானது மட்டுமல்ல - அழிக்க முடியாத மதத்தில் இரண்டறக் கலந்துவிட்டிருக்கும் இந்தக் கொடுமை எப்பொழுது முடிவுக்கு வரும் என்பதே என் முன்னாலிருக்கும் கேள்வி.

# எத்தனை காலம் தான் மக்களை ஏமாற்றுவது?

## கேள்வி எழுப்புகிறார் டக்ளஸ்



நாட்டின் கொள்கை வகுக்கும் பிரதான அமைப்பான தேசிய நிறைவேற்றுச் சபையில் அங்கம் வகித்துக் கொண்டு, நாங்கள் இந்த அரசுடன் முழுமையாகச் சேரவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுவது, எமது மக்களை ஏமாற்றும் செயலாகும்.

கடந்த 19ஆம் திகதி, களுவாஞ்சிக்குடி, சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது, நாங்கள் இந்த அரசுடன் முழுமையாகச் சேரவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் கூறியிருக்கிறார்.

இந்த நாட்டின் கொள்கை வகுத்தல் தொடர்பான முக்கிய அமைப்பான தேசிய நிறைவேற்றுச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்கும் நிலையில்கூட, எமது மக்களின் பிரச்சினைகளை கூட்டமைப்பு தீர்ப்பதாக இல்லை. இது, இவர்களது அக்கறையின்மையையே காட்டுகின்றது. எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்துவரும் கூட்டமைப்பினர், தங்களது சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் பின்னிற்பதில்லை. ஆனால், மக்களது தேவைகள் என வரும் போது, இவ் வாறான கதை களைக் கூறி, மக்களை ஏமாற்றவே முனைகின்றனர்.

இவ்வாறான நிலையில், தொடர்ச்சியாக எமது அரசியல் பலத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அரிய நேத்திரன் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினைகளாக்கி, அதனை இழுத்தடித்துக் கொண்டிருப்பதில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் இருப்பு தங்கியிருக்கும் நிலையில், அவர்களது அரசியல் பலம் எமது மக்களுக்கு எதையுமே பெற்றுத் தராது என்பதே அவர்களது வரலாறு என்பதை எமது மக்கள் நன்கு புரிந்துகொண்டுள்ளனர்.

தங்களது கட்சிப் பதிவு விடயத்திலேயே ஓர் இணக்கப்பாட்டை எட்ட முடியாமல் இழுபறி நிலையில் இருந்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள் என்று நம்ப முடியுமா என்பதே எமது மக்களது கேள்வியாகவுள்ளது.

# தேர்தல் முறைமை மறுசீரமைப்பு மும்முனைகளில் கிளம்பும் எதிர்ப்பு

## சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யோசனைகளுக்கு கண்டனம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள தேர்தல் திருத்த யோசனையானது சிறுபான்மை இன மற்றும் சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை பாதிப்பதாகவுள்ளது. அதனை நாம் நிராகரிக்கின்றோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் எடுத்துரைத்துள்ளன. அத்துடன் தற்போதுள்ள தேர்தல் முறைமையில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுவதாயினும் சரிபுதிய தேர்தல் முறைமையை உருவாக்குவதாயினும் சரி அனைத்துக் கட்சிகளினுடைய பொது இணக்கப்பாட்டிலேயே மேற்கொளள்ப்பட வேண்டும் எனவும் அக்கட்சிகள் தேர்தல்கள் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளன.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய உட்பட தேர்தல்கள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று திங்கட் கிழமை இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் திணைக்களத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அமைச்சர்களான கரு ஜயசூரிய, லக்ஷ்மன் கிரியெல்ல, விஜயதாஸ ராஜபக்ஷ, பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி. பெரேரா, அக்கட்சியின் சட்ட செயலாளர் தயாபெல்பொல ஆகியோரும் ஸ்ரீல்ங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கிம், இராஜாங்க அமைச்சர் எம்.ரி. ஹசனலி, பிரதி பொதுச் செயலாளர் நிஷாம் காரியப்பர், நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பவா பாருக் ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருப்பதாவது: தேர்தல்கள் ஆணையாளரைச் சிறுபான்மை கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியும் சந்தித்திருந்தோம். இதன்போது தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் திருத்த யோசனையானது சிறுபான்மை இன மற்றும் சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவங்களைப்பாதிப்பதாகவே உள்ளது. ஆகவே, அதனை ஏற்றுக்கொள்வதென்பது யதார்த்தமான விடயமொன்றல்ல. அதனை நாம் நிராகரிக்கின்றோம். அதேநேரம் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக கவனம் செலுத்தப்படும் போது கலப்புத் தேர்தல் முறைமை தொடர்பாக அதிகம் பேசப்படுகின்றது. விகிதாசர மற்றும் தொகுதி வாரி ஆகிய முறைமைகளை உள்ளடக்கிய கலப்பு முறை தேர்தல் முறைமையொன்று கொண்டு வரப்படும் பட்சத்தில் இரண்டு முறைமையிலும் ஐம்பதுக்கு ஐம்பதாக இடம்பெற வேண்டும். அதன் மூலமே சிறுபான்மை மற்றும் சிறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதித்துவம் பாதிக்காதவாறு அமையும். அதேபோன்று தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் அவசர யோசனைகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. மேலும் அவசரமாக எல்லை நிர்ணய குழுவொன்றை அமைத்து சரியான ஆய்வுகளுக்குப் பின்னர் அதன் அறிக்கையைப் பெற்று தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தப்பட்டு தேர்தலொன்றை நடத்துவதற்கு குறிப்பிடத்தக்களவு கால அவகாசம் தேவையாகவுள்ளது. என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

### வலி.வடக்கில்...

எமது மக்களிடம் இல்லாத நிலையில், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, காணிகளை விரைவாகத் துப்புரவு செய்து கொடுப்பதந்கு அரசு முன்வர வேண்டும்.

அதே நேரம், துப்புரவு செய்யப்படுகின்ற பகுதிகளில் மக்கள் மீள் குடியேறுவதற்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளையும் புனரமைப்பு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் ஊடாக மேற்கொள்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஏற்கனவே மீள் குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ள பகுதிகளில் இன்னும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள் இருக்கின்றன. அதே நேரம், அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவ முன்வர வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீண்ட காலமாக பயன்பாட்டில் இல்லாத பகுதிகளில் மீள் குடியேற்றப் பட்டுள்ள மக்கள் தங்களது வாழ்க்கையை புதிதாக ஆரம்பிக்க வேண்டிய நிலையிலேயே உள்ளனர். இடம்பெயர்ந்த நிலையில், பல வருட காலமாக, பல் வேறு இடங்களில், தற்காலிக நிலையில் வாழ்ந்துவந்த இம்மக்கள் வசதி வாய்ப்புக்களுடன் வாழ்ந்தவர்கள் அல்லர்.

எனவே, தங்களது வாழ்க்கையை இம் மக்கள் புதிதாக ஆரம்பிப்பதற்கு ஏதுவான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்வர வேண்டும் என செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மைத்திரி...

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதனைத் தடுக்கும் நோக்கில் இவ்வாறு நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். 19ஆவது திருத்தத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே நேரடியாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான தரப்பினரே இவ்வாறு கையொப்பங்களைத் திரட்டி வருகின்றனர் என்றும் தெற்கில் இருந்து கிடைக்கும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

### விசாரணைக்கு...

வில், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த எமிரேட்ஸ் விமானம் மூலம், நாடு திரும்பினார்.

திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற பாரிய முறைகேடுகள் குறித்து இவர் விசாரணை செய்யப்படவுள்ள நிலையில், விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்படலாம் என்று முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதேவேளை, பசில் ராஜபக்சவை வரவேற்பதற்கான சுமார் 1000 வரையான ஆதரவாளர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வெளியே ஒன்று கூடியுள்ளனர்.

அதேவேளை, கட்டுநாயக்க விமான நிலையத்தின் விருந்தினர் வரவேற்பு பகுதி நேற்று மதியத்துடன் மூடப்பட்டுள்ளது.

அதேவேளை விமான நிலைய வீதிகளில் தடுப்புகளுடன் பொலிசார் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து வெளியேவந்த பசில் ராஜபக்ச, வெளியில் கூடியிருந்த ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றினார்.

இதன்போது சட்டத்தை மதிக்கும் குடிமகன் என்ற வகையில் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளுக்குப் பதிலளிக்கவே நாடு திரும்பியதாகத் அவர் தெரிவித்தார்.

### நாடாளு...

காணப்பட்டது. நாடாளுமன்றத்துக்கான வீதிகளை மூடியுள்ள பொலிஸார் கலகத் தடுப்பு பிரிவு, சிறப்பு அதிரடிப் படைப்பிரிவு ஆகியவற்றையும் அங்கு நிறுத்தியிருந்தனர்.

நீர்ப்பீரங்கி வாகனமும், அந்தப்பகுதிக்கு கொண்டு வரப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

அதேவேளை நாடாளுமன்றத்திலும் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து சபை நடவடிக்கைகள், சபாநாயகரால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நேற்று காலை நாடாளுமன்றம் கூடியதும், மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபை நடவடிக்கையைத் தொடர விடாமல் போராட்டம் நடத்தினர்.

அப்போது சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வாக்குமூலம் பெறுவதற்கு முன்னர் தனக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த நிலையில், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளருக்கு எதிராக 113 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதம், சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

இதனிடையே, நேற்றுமுன்தினம் இரவு நாடாளுமன்றத்துக்குள் தங்கியிருந்து போராட்டம் நடத்திய எதிர்க்கட்சியினர், சபைக்குள் மதுபானம் அருந்தியதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றம் சாட்டினார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், குற்றச்சாட்டை அமைச்சர் ரவி கருணாநாயக்க விலக்கிக் கொள்ள வேண்டும் என்று கோரி கூச்சலிட்டனர்.

இதனால் சபை நடவடிக்கைகளை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைத்த சபாநாயகர், கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினார்.

அதில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்துக்கு வந்து கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து பிற்பகல் 12.30 மணியளவில் கட்சித் தலைவர்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு முடியும் வரை சபை நடவடிக்கைகளை ஒத்திவைப்பதாக சபாநாயகர் சமல் ராஜபக்ச அறிவித்திருந்தார்.

எனினும் சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத்துவதற்கான சூழல் ஏற்படாததினால் நாடாளுமன்றம் எதிர்வரும் 27ஆம் திகதி ஒத்திவைக்கப்படுவதாக சபா நாயகர் அறிவித்தார்.

தொடர்ந்து மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்து நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இந்த நிலையில், ஆணைக்குழு அதிகாரிகளை மகிந்த ராஜபக்சவிடம் சென்று வாக்குமூலம் பதிவு செய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதாக, நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச உறுதியளித்தார்.

இதையடுத்து, தமது எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிடுவதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்தார்.

அத்துடன் தமது இலக்கு எட்டப்பட்டு விட்டதாக, நாடாளுமன்றத்துக்கு வெளியில் போராட்டம் நடத்தியவர்களிடம் தெரிவித்த அவர், அவர்களைக் கலைந்து செல்லுமாறும் கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, நாடாளுமன்றத்துக்கு வெளியில் இடம் பெற்ற போராட்டங்கள் கைவிடப்பட்டன.

இதனால், நேற்றும் இன்றும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருந்த 19ஆவது திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் 27ஆம், 28ஆம் நாள்களில் விவாதிக்கப்படும் என்றும், 28ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் சபாநாயகர் அறிவித்தார்.

# கரைச்சிப்பிரதேச சபையில் குழப்பம்; சபை நடவடிக்கைகள் ஒத்திவைப்பு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் நேற்றைய சபை அமர்வுகள் காலை 11 மணியளவில் சபை உபதலைவர் வடிவேல் நகுலேஸ்வரன் தலைமையில ஆரம்பமாகிய நிலையில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினரின் கேள்விகளால் சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டது.

உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைக்கப்படவுள்ள சந்தைக் கடைத்தொகுதிகள் மாவட்டத்தின் பொது அமைப்புக்களின் மூலம் அமைக்கப்பட வேண்டும் என சபையில் தீர்மானம எடுக்கப்பட்ட நிலையில், குறித்த வேலைக்காக பயன்படுத்த உள்ள நிதியின் தொகை அதிகமாகையால், பொது அமைப்புக்கள் மூலம் மேற்கொள்ள முடியாது என வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத் அறிவுறுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பல அமர்வுகளில் வாதபிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளதாகவும், குறித்த நிதியினைப்பயன்படுத்தி வேலைகளை ஆரம்பிக்காவிட்டால் நிதி மீள பெற்றுக்கொள்ளப்படும் அபாய நிலை காணப்படுவதாக தெரிவித்து இன்று சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக தீர்க்கமான முடிவுகள் எட்டப்பட்டு நடவடிக்கைகள் முனனெடுக்கப்படும் வரை சபை நடவடிக்கைகளில் தான் ஈடுபடப் போவதில்லை என தெரிவித்து உறுப்பினர் வி.சுவிஸ்கரன் வெளி நடப்பு செய்தார். இதனைத் தொடர்ந்து சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

தொடரந்து இரணைமடு பொதுச்சந்தை மினி சூறாவளியினால் பாதிக்கப்பட்டமை தொடர்பிலும், தீர்மானம் எடுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்து சபை நடவடிக்கையில இருந்து விலகி, கவன ஈர்ப்பில் உறுப்பினர் மாரியப்பன் சுகந்தன் ஈடுபட்டார். சபையின் நடுவில் தரையில் அமர்ந்து சபை நடவடிக்கைகளை அவதானிக்க உள்ளதாக கோரி அமர்ந்து கொண்டார்.

இதனையடுத்து குறித்த உறுப்பினரின் கோரிக்கைகளை கேட்டறிந்த உப தலைவர், அவரவது கோரிக்கைகளை ஆராய்ந்து முடிவுகளை எட்டுவதாக வாக்குறுதி அளித்து, உறுப்பினரின் ஆசணத்தில் அமருமாறும் வேண்டியதை அடுத்து மீண்டும் சபையமர்வுகளில் கலந்து கொண்டார். எனினும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளால் சபையில் தொடர்ந்தும் அமைதியின்மை ஏற்பட்டது இதனையடுத்து சபை இடைநடுவில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. (29)

# நாட்டின் பிரதான இரு கட்சிகளும் நல்லாட்சியை ஏற்படுத்துவதில் சிக்கல்

## சரத்பொன்சேகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

நல்லாட்சியைக்கொண்டு வருவதாகக்கூறிய, பிரதான இரு கட்சிகளிலும் மோசடிக்காரர்களே உள்ளார்கள் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

காலியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிபபிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இவ்வாறான ஒரு நிலை நாட்டில் காணப்படும் போது நல்லாட்சியை கொண்டு செல்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இரு கட்சிகளினாலும் நியமிக்கப்பட்டவர்களில் 50 வீதமானோர் மோசடிக்காரர்களே. அவர்களின் அலுமாரியில் எலும்பு கூடுகளே காணப்படுகின்றன.இது இரு கட்சிகளுக்குமே காணப்படுகின்ற மிக பெரிய பிரச்சினை. தற்போதைய அரசாங்கத்தின் பங்காளிகள் என்பதே.

ஐக்கிய தேசியக்கட்சி தனியாகக் கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டிருந்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன களமிறங்கியிருக்க மாட்டார்.

இரண்டு, மூன்று பேரை சிறைக்கு அனுப்பி நல்லாட்சி கொண்டு செல்ல முடியாது. பிரதமரும், ஜனாதிபதியும் மோசடிக்காரர்கள் அல்ல என்பது எங்களுக்கு தெரியும்,

எனினும் அவர்களுக்கு கீழ் செயற்படுபவர்கள் மோசடிக்காரர்களே என பொன்சேகா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இடைவிலகிய மாணவர்களை மீண்டும் இணைக்க ஏற்பாடு

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலையை விட்டு. இடைவிலகி பாடசாலைக்கு செல்லாமல் 186 சிறுவர்கள் இருப்பதாக மாவட்டச் செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவுத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

இச்சிறுவர்களை மீண்டும் பாடசாலைக்கு அனுப்புவதற்காக, இவர்களிடமுள்ள பிரச்சினைகளை அடையாளங்கண்டு தொடர்ந்தும் கற்க விரும்பும் சிறுவர்களுக்கு உதவிகள் செய்யப்படவுள்ளன்.

மேலும் கல்வி கற்க விருப்பம் தெரிவிக்காத பிள்ளைகள், தொழில் செய்ய விரும்பினால் அவர்களின் வயதைக் கருத்திற்கொண்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அடிப்படை கல்விச் சான்றிதழ் பெறுவதற்கு அவர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வேலைக்குச் செல்வதற்கு தாயாராகவுள்ள பிள்ளைகளுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்கி அவர்களின் எதிர்காலமும் வளமாக்கப்படும். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பெண்கள், சிறுவர் பிரிவால் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இது பல்கலைக்கழகமா? பள்ளிக்கூடமா? பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கிழக்கு பல்கலைக் கழக கல்லடி, சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக மாணவர்கள் நேற்று வகுப்புகளைப் பகிஷ்கரித்து கவன யீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கல்லடி, சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களே இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எதிரான தோசங்களை எழுப்பினர். "இது பல்கலைக்கழகமா, பள்ளிக்கூடமா?", "எங்கே எங்கே சுற்றுலாவுக்கான நிதி எங்கே?", "போராட்டம் இது போராட்டம் எமது உரிமைக்கான போராட்டம்", "யாருக்கு யாருக்கு இராஜதுரை அரங்கு யாருக்கு" போன்ற சுலோகங்களை போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.

அரையாண்டு பரீட்சை நேர அட்டவணைப்படி உரிய நேரத்திற்கு நடைபெறாது பிற்போடப்படுவதுடன் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுவதில் தொடர்ந்து தாமதப்போக்கே நிலவிவருகின்றது என தெரிவித்த மாணவர்கள் இது தொடர்பில் கடந்த காலத்தில் நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டுசென்ற போதிலும் இதுவரையில் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையெனவும் தெரிவித்தனர்.

# அமைச்சர் ரோஸி நியூயோர்க்கில்

நியூயோர்க் நகரில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் 48 ஆவது சனத்தொகை அபிவிருத்தி ஆணைக்குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றுள்ள சிறுவர் விவகார அமைச்சர் ரோஸி சேனாநாயக்க, அந்நாட்டிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களினால் வரவேற்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வலி.வடக்கில் மேலும் ஒருபகுதி விடுவிப்பதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள மேலும் சில இடங்களில் மீள்குடியேற்றுவதற்கும் அங்கு குடியேறும் மக்களுக்கான தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுப்பது தொடர்பாக நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் ஆராயப்பட்டுள்ளது.

நேற்றுக்காலைஇடம்பெற்ற இக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயக்ன் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைப்பது தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதன்போது வலி.வடக்கில் இன்னமும் மீளக்குடியேற்றப்படாத சாண்டை, வறுத்தலைவிளான், விமன்காமம் ஆகிய இடங்களில் மக்களை மீள்குடியேறுவதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் மீள்குடியேறும் மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுப்பதுடன் மின்சாரம், குடிநீர் போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதனையடுத்து மீள்குடியேற்ற அமைச்சின் மீள்குடியேற்ற செயலணியின் கலந்துரையாடல் ஒன்று அடுத்த வாரம் இடம்பெறவுள்ளதாகவும் அரச அதிபர் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலின் போது அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (25)

# கட்டாக்காலிகளைப் பிடிக்குமாறு பிரதேச சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நவாலியில் கட்டாக்காலியாகத் திரியும் அனைத்து ஆடுகள் மாடுகள் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு பின்னர் திடீரென விசேட நிபுணத்துவ குழுவின்ரால் பிடிக்கப்படும்.

பிடிக்கப்படும் அனைத்து மாடுகளும் ஏழு நாள் பராமரித்து அவகாசம் வழங்கப்படும்.

குறித்த நாட்களுக்குள் மீளப்பெறாத அனைத்து கால்நடைகளும் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் சி.சி.மகேந்திரன் அறிவித்துள்ளார்.

நவாலி தெற்கு-நாவாலி கிழக்கில் உள்ள 50 கட்டாக்காலி மாடுகளை பிடிக்க 15 விசேட பிடிகாரர்களைத்தவிசாளர் நியமித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (92)

# பெண்கள் அபிவிருத்தி; கிளிநொச்சியில் ஆராய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில், திணைக்களங்கள் மூலம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டன. மதுபானம் மற்றும் புகைப்பிடித்தல் தொடர்பில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

மேலும். குடும்ப வன்முறைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான துஸ்பிரயோக நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது பெண்கள் மற்றும் சிறுவர்கள் குறித்து எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய நலத்திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளராக சுந்தரம் அருமைநாயகம் பதவியேற்ற பின்னர் கலந்துகொண்ட முதலாவது கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.